★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டுச்சோலை
70, 71A, சிறப்பு அங்காடி
நவீனசந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper
உதயன்
விலை ரூபா 5-00
சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 24 வெள்ளிக்கிழமை (08 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 222

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ திடீரெனக் கொழும்பு திரும்புகிறார்!

தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கட்சியைப்பதிவு செய்வதற்கு மனு

கொழும்பு, ஜூலை 8

ஜே. வி. பி. இயக்கத்தின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா தமது தலைமறைவு வாழ்வை முடித்துக் கொண்டு, திடீரெனக் கொழும்பு திரும்புகிறார்!

1989 ஆம் ஆண்டில், ஜே. வி. பியினரின் ஸ்தாபக தலைவர் றோகண விஜேவீர கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தலைமறைவாக வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் சோமவன்ஸ ஏற்கனவே பாரிஸில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணமாகிவிட்டார் என மற்றொரு தகவல் தெரிவித்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காகவே அவர் நாடு திரும்புகிறார் என்று சொல்லப்படுகிறது.

கொலையுண்ட றோகண விஜேவீராவின் தலைமையில் இயங்கிய ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி) இயக்கம், 1988, 1989 ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டிருந்தது.

வன்செயல்களின் உச்சக் கட்டத்தில் விஜேவீராவும் அவரது நெருங்கிய சகா

[6 ஆம் பக்கம் பார்க்க]

பிரேமதாசா கொலையை விசாரிக்க கமிஷன்

குடும்பத்தினருக்கு டி.பி. உறுதி

கொழும்பு, ஜூலை 8

தற்போது நடைபெறும் விசாரணைகள் பூர்த்தியானதும் பிரேமதாசாவின் படுகொலை குறித்து விசாரிப்பதற்கு விசாரணைக் கமிஷன் ஒன்றை தாம் நியமிக்கப் போவதாக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க பிரேமதாசா குடும்பத்தினருக்கு உறுதியளித்துள்ளார்.

விசாரணைக் கமிஷன் நியமிப்பது தற்பொழுது நடத்தப்பட்டுவரும் விசாரணைகளுக்கு, குந்தகம் விளைவிக்குமாகையால் உடனடியாக விசாரணைக் கமிஷன் ஒன்றை தன்னால் நியமிக்க முடியாதிருக்கிறது என்றும் பிரேமதாசா குடும்பத்தினருக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

லலித் அத்துலத்முதலி படுகொலை பற்றிய விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் லலித் படுகொலை குறித்து விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட இருக்கிறது என்றும் பிரேமதாசா குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

விடுதலைப் புலிகளின் தாக்குதல் பட்டியல்!

"சண்டே ரைம்ஸின்" தகவல்

விடுதலைப்புலிகளின் தாக்குதல் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுபவர்களின் பெயர்களை "சண்டே ரைம்ஸ்" வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் காமினி திஸநாயக்கா, தென்மாகாண முதலமைச்சர் சந்திரிகா, பாதுகாப்பு அமைச்சுச்செயலாளர் ஹமில்டன் வனசிங்க, இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா, விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க, கடற்படைத் தளபதி மொஹான் சமரசிங்க ஆகியோரே அவர்கள்.

தென்இலங்கைத் தலைமைத்துவத்தையும் படையினரின் மனோபலத்தையும் பலவீனப்படுத்துவதற்காக இவர்களில் எவரையும் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் முயற்சிக்கும் சாத்தியம் இருப்பதாகவும் "சண்டேரைம்ஸ்" தெரிவித்துள்ளது.

செஞ்சிலுவையினர் நடத்தும்

பிளாம்பயான் கப்பலும் காங்கேசனில் சோதனை!

யாழ்ப்பாணம், ஜூலை 8

கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய 19 பேரை திருகோணமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு வந்த பிளாம்பயான் கப்பல் நேற்றுக்காலை காங்கேசன்துறையில் வைத்து கடற்படையினரால் சோதனை செய்யப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவினால் நடத்தப்படும் இக்கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நேற்றே முதல் தடவையாக கடற்படையினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

சகல கப்பல்களையும் காங்கேசன்துறையில் வைத்து சோதனையிடுவது என்ற கடற்படையினரின் முடிவுக்கு இணங்கவே இக்கப்பல் சோதனையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் இருந்த சகலரும் விசாரிக்கப்பட்டு பொருள்களும் சோதனையிடப்பட்டதாக நேற்று வந்தவர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு செல்லும் அவசர நோயாளர்களை ஏற்றிக்கொண்டு இக்கப்பல் நேற்று மாலையே கொழும்பு திரும்பியது.

[ஒ-3-173]

"புளொட்" உறுப்பினர்கள் ஐவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 8

மன்னார் மாவட்டத்தில் கொலை, கொள்ளை, தீவைப்பு ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் "புளொட்" இயக்கஉறுப்பினர்கள் ஐவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்புபிரதம நீதிவான் ஆபேபிட்டியா உத்தரவிட்டார்.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு இந்த ஐவரையும் மன்னார் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்ய முடியாமல் உள்ளது என்றும்—

மேற்படி வழக்கை கொழும்பில் விசாரிக்க சட்டமா அதிபருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் —

அது பற்றிய முடிவு கிடைக்கும் வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கும்படியும் அரச தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டார். அந்தக் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

(உ)

சோமவன்ஸவின் வருகை பயங்கரவாதத்தை தூண்டவே

அரசு மீது சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 8

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா பாரீஸில் இருந்து கொழும்பு திரும்புவது அரசாங்கத்தினாலேயே ஒழுங்கு செய்யப்பட்டது என நான் நம்புகின்றேன்.

மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அமரசிங்காவை அரசு கொண்டு வருவது தேர்தல் காலத்தில் பயங்கரவாத வன்செயல்களைத் தூண்டி விடுவதற்கேயாகும் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஜே.வி.பி தேர்தலில் போட்டியிடுவதால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குக் கிடைக்கும் வாக்குகளில் பாதிப்பு ஏற்படாது என்றும் சந்திரிகா நம்பிக்கை தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே நேரத்தில் நடத்துவது அரசின் பொறுப்பு என்றும் - வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் சந்திரிகா கூறினார்.

கலைக்கப்படும் அளவு தோல்வியை எதிர்நோக்கும் ஆளும் கட்சி பயங்கரவாத வன்செயல்களைத் தூண்டிவிடும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எந்தப் பயங்கரவாத வன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அவசரகால சட்டத்தை நீடிக்க அமைச்சரவை ஆலோசனை

பொதுத் தேர்தல் காலத்திலும் அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அறியவந்துள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது குறித்து நீண்டநேரம் விவாதிக்கப்பட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் சுதந்திரமாக நடப்பதற்கு அவசரகாலச் சட்டம் காலாவதியாக விடப்பட வேண்டும் என்று சில அமைச்சர்கள் கருத்து தெரிவித்தனராம்.

ஆயினும், கூடுதல் எண்ணிக்கையான அமைச்சர்கள் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட வேண்டும் என்பதற்குச் சாதகமாகவே கருத்து வெளியிட்டனர் என்று சொல்லப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல், தேர்தலை நடத்திமுடிப்பது கடினம் என்று அவர்கள் எடுத்துக்கூறினர்.

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படாவிடில் பல வகைகளாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை அரசமைப்பு அமைச்சர் கே. என். சொக்ஸி நீண்ட பட்டியல் போட்டு விளக்கி

[6 ஆம் பக்கம் பார்க்க]

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வென்றால் விஜேதுங்காவின் நிலை எப்படி இருக்கும்?

கொழும்பு, ஜூலை 8

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டினால் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா என்ன செய்வார்? இதனால் ஏற்படும் அரசமைப்பு நெருக்கடி எப்படி சமாளிக்கப்படும்?

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இக்கேள்விகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

சுதந்திரக்கட்சி அரசு பதவியில் இருந்தபோது நீதிஅமைச்சுச் செயலாளராக பணிபுரிந்த திரு. நிமால் ஜய[illegible]கிரம இது பற்றித் தெரிவித்திருப்பதாவது:

1978 அரசமைப்பின் கீழ் ஜனாதிபதி நாட்டின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் இருக்கிறார்.

இதன் அர்த்தம் ஜனாதிபதி பிரதமர் மற்றும் அமைச்சர்களை நியமிப்பதுடன் அமைச்சரவையின் தலைவராக இருந்து அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து நிகழ்த்தப்படும் அர

(6ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை வழக்கு;

சிறையில் நின்றமரத்தில்ஏறி கைதிகள் சத்தியாக்கிரகம்

சென்னை, ஜூலை 8

ராஜீவ் கொலை தொடர்பாக கைதான இலங்கைத் தமிழ்க் கைதிகள் ஏழு பேர் சைதாப்பேட்டை சிறையில் இருந்த மரத்தில் ஏறி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

தங்களது உறவினர்களுடன் நீண்ட நேரம் பேச அனுமதி தர வேண்டும் என்றும், நல்ல மருத்துவ சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்றும் கோரியே இவர்கள் சத்தியாக்கிரகத்தில் குதித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் கோரிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-4]

சுதந்திரக் கட்சியில் காமினி பொன்சேகா

கொழும்பு, ஜூலை 8

முன்னாள் உபசபாநாயகர் காமினி பொன்சேகா சுதந்திரக் கட்சியில் சேர்ந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக்கட்சி உறுப்புரிமையை நேற்றுப் பெற்றுக்கொண்ட அவர் பின்னர் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடக்கூடும் என்று முன்னாள் உபசபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

தமிழீழ வைப்பகத்தில்

இரண்டரைச்சத வீத மாதவட்டியுடன் அடகுகடன்

யாழ்ப்பாணம், ஜூலை 8

தமிழீழ வைப்பகம் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் அடகுக் கடன் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

அடகுக் கடனுக்கு இரண்டரை வீத மாத வட்டி மட்டுமே அறவிடப்படுகிறது.

தமது தொழில் மற்றும் திடீர் தேவைகளின் போது, மிகக் குறைந்த வட்டியுடன் அடகுக் கடனைப் பெறுவதற்கு இத்திட்டம் மக்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

அடகுக் கடன் திட்டம் குறித்த மேலதிக விவரங்களை அறிய விரும்புவோர் தமிழீழ வைப்பகப் பணிமனையில் பெறலாம்.

மக்களின் தாங்குவலுவுக்குட்பட்ட 2½ எளியமாத வட்டி மட்டுமே அறவிடப்படுவதும், தமது தொழில் மற்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜி. சீ. ஈ.
உயர்தரப் பரீட்சை
நேர அட்டவணை
5 ஆம் பக்கத்தில்

தமிழர்கள் விசாரணை இன்றி நீண்டகாலம் தடுத்து வைப்பு

மன்னிப்புச் சபை கண்டனம்

லண்டன், ஜூலை 8

இலங்கையில் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாமல் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று வெளியிட்ட வருடாந்த அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பத்து ஆயிரத்துக்கதிகமான அரசியல் கைதிகள் சிறைகளில் விசாரணையின்றி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆசியாவில் பல நாடுகளில் உள்ள அரச படைகள் மனித உரிமை மீறலில் ஈடுபடுவதற்கு அந்த நாடுகளின் அரசாங்கங்கள் இடமளித்து வருகின்றன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ-6)

வல்வைக் கடலில் இரவில் மீனவர் படையினரால் கைது

வல்வெட்டித்துறை, ஜூலை 8

நேற்று முன்தினம் புதன் இரவு 9 மணியளவில் வல்வெட்டித்துறை நிக்கம் கடற்பகுதிக்குள் விசைப்படகில் திடீரெனப் பிரவேசித்த ஸ்ரீலங்கா கடற்படையினர் இளம் மீனவர் ஒருவரைக் கைதுசெய்து கொண்டு சென்றனர். அவரது கட்டுமரம் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டன.

அவருடன் சென்றிருந்த மற்றொரு மீனவர் கடலில் குதித்து, சுழியில் சிக்கி பெரும் சிரமத்தின் மத்தியில் ஒருவாறு கரைசேர்ந்தார்.

அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த ஏனையோரும் கடற்படையினரின் பிடியில் இருந்து தப்பிக்கொண்டனர்.

படையினர் 'பரா' வெளிச்சம் பாய்ச்சி, தாக்குதல் நடத்தியபோதும் அதிர்ஷ்டவசமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

வல்வை அம்மன் கோவிலடி, வாடியடியைச் சேர்ந்த வரதராசா இராசரத்தினம் (வயது 22) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே படையினரால் கைது செய்யப்பட்டவர் ஆவார். துரைசாமி சிவலிங்கம் (வயது 22) என்பவரே தப்பிவந்தவர் ஆவார்.

கடந்த சில தினங்களுக்கு முன் கற்கோவளத்தில் இரு மீனவர்களும், பருத்தித்துறையில் இரு மீனவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். நேற்று முன்தினம் பிடிபட்டவருடன் சேர்த்து இதுவரை ஐந்து மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

([illegible])

முச்சந்தி முரளி



சும்மா போன நண்டை [illegible] நிலை தான் பாருங்கோ டி.பி. [illegible]

நீதிமன்றம் செல்லும் திட்டம் கைவிடப்பட்டது!

யாழ். மாவட்டத்தில் போட்டியிட தயாராகுகின்றது கூட்டணி!

கொழும்பு, ஜூலை 8

யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடத்த முயற்சித்தால் அதனை ஆட்சேபித்து நீதிமன்றம் செல்வோம் என்று கூறி வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி இப்போது தனது போக்கை மாற்றிக் கொண்டுள்ளது.

"யாழ். மாவட்டத்தில் தேர்தலை நடத்தக் கூடாது என்று தேர்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளோம். தேர்தலை நடத்துவதுதான் என்று அவர் தீர்மானித்தால், யாழ். மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடும்".

— கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

"சண்டே ரைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார். அவர் மேலும் சொன்னதாவது;

தமிழ்க் கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதில் விடுதலைக் கூட்டணிக்கு அக்கறை கிடையாது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றையும் முன்வைக்கவில்லை.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி மறைமுக ஆதரவு வழங்குவதாகக் கூறப்படுவது சரியல்ல.

வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்ட ஓர் அலகாக உள்ள சமஷ்டி அரசமைப்பு ஒன்றையே கூட்டணி கோருகின்றது

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள
கறுப்பு கண்ணாடி மோகம்
ஆபத்து என எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 8

மருத்துவ ஆலோசனையின்றி கறுப்பு கண்ணாடி அணிவதில் இளைஞர்களின் ஆர்வம் அதிகரித்து வருகிறது இதனால் கண்பார்வை பாதிக்கப்படும் ஆபத்து உண்டு என கொழும்பு கண் ஆஸ்பத்திரி பணிப்பாளர் டாக்டர் உபாலி பெனிடிஸ் தெரிவித்துள்ளார்.

சூரியக் கதிர்களில் இருந்து கண்களைப் பாதுகாப்பதற்காக கறுப்புக் கண்ணாடி அணிய வேண்டிய அவசியம் சிலருக்கு இருக்கின்றது எனினும் மருத்துவ ஆலோசனையின் பேரிலேயே அவற்றை அணிய வேண்டும்;

தற்சமயம் கறுப்புக் கண்ணாடிகளை நடைபாதை சந்தைகளிலும் சாதாரணமாக வாங்கக் கூடியதாக இருப்பதால் இளைஞர்கள் அவற்றை ஒரு அழகுசாதனமாக எண்ணி வாங்கி அணிகிறார்கள். இது ஆபத்தானது! உடன் தவிர்க்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். [ஒ-ஐ)

வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு
ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில்
மகோற்சவ கால தெய்வீகப் பேருரைகள்
நிகழ்த்திய சொற்பொழிவாளர்
கம்பகலாசுரபி
திரு. த. சிவகுமாரன் அவர்களை
(அமைப்பாளர் - காரைநகர் கம்பன் கழகம்)
ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி
பாராட்டிக் கௌரவிக்கும் விழா
காலம்:- சண்டேஸ்வரர் உற்சவ தினம் [இன்று]
08 - 07 - 1994 நேரம்:- 7. 30 மணி
தலைவர்:- கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
[தலைவர் - இந்துநாகரிகத்துறை - யாழ். பல்கலைக் கழகம்]
பாராட்டுரை வழங்குவோர்:-
திரு. து. வைத்திலிங்கம்
[பிரதேச செயலர் - சண்டிலிப்பாய்]
திரு. து. சிவபாலன்
[பிரதம கணக்காளர் - யாழ். செயலகம்]
திரு. வி. மாணிக்கம்
[அதிபர் கனகரட்ணம் ம. ம. வி.]
நன்றியுரை:- திரு. பி. கே. பி. பாலசங்கர்
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★
தேவஸ்தானம்
காட்டுத்துறை பிள்ளையார் கோயில்

அன்பளிப்பு:-
கந்தன் களஞ்சியம்
கரடிப்போக்கு சந்தி. யாழ் வீதி,
கிளிநொச்சி.
[7513]

யாழ் ஸ்ரீதரில்...
தினசரி 4-00 மணிக் காட்சியாக
உயிராயுதம்
தினசரி மாலை 6-00 மணி சனி, ஞாயிறு
காலை 10-30, மாலை 6-00 மணி காட்சியாக
JURASSIC PARK
சனி, ஞாயிறு பிற்பகல் 2-30மணிக்கு மட்டும்
மே-94 ஒளிவீச்சு
(கி-8713)

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
யாழ். பல்கலைக்கழக
இந்து நாகரிகத் துறையுடன்
இணைந்து நடத்தும்
சுவாமி விவேகானந்தரின்
உலகச் சமயப் பெருவிழா
நூற்றாண்டு தொடர் நிகழ்வின்
கருத்தரங்கும் புத்தகக் கண்காட்சியும்

முழுநாள் கருத்தரங்கு: **22 - 07 - 94** வெள்ளிக்கிழமை
இடம்: கைலாசபதி கலையரங்கு

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்கள் பெயர்களை இந்து நாகரிகத்துறை அலுவலகத்தில் 15 - 07 - 1994க்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

கருத்தரங்கில் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களின் ஆய்வுரைகளும் இடம்பெறும்.

புத்தகக் கண்காட்சி: **23 - 07 - 94** சனிக்கிழமை
இடம்: இந்து நாகரிகத்துறை மண்டபம்

- சுவாமி விவேகானந்தர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை
[illegible]

ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஜூலை 8

நல்லூர் ஸ்ரீபாலகதிர்காமம் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும். (இ-111)

★ ★ ★

வண்ணை பன்றிக்கோட்டு பிள்ளையார் கோயில் அலங்கார உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெறுகிறது. எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த உற்சவத்தின்போது தினமும் பிற்பகல் 5.30 - 6.30 மணி வரை சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும். (க)

★ ★ ★

வட்டுக்கோட்டை உடுக்கிய வளைப் பிள்ளையார் கோயிலில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 3மணிக்கு இளைப்பாறிய பொறியியலாளர் திரு. சி. இரட்ணராசா "பகவத்கீதை" எனும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் அடுத்தநாள் காலை 6 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலத்தில் தினமும் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மகாபாரதம் பற்றிய தொடர் விரிவுரைகளை நிகழ்த்துவார். (உ)

★ ★ ★

நாகேஸ்வரம் அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மகா கும்பாபிஷேக தின மணவாளக் கோல விழா நடைபெறும். (க-51)

★ ★ ★

அராலி வண்ணபுரம் ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாதேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தை ஒட்டி மேற்படி ஆலய தொண்டர் சபையினர் நடத்தும் மாணவர்களிடையேயான சைவசமய அறிவுப் பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறும். (க-18)

தனக்குத் தானே புதைகுழி தோண்டினார் செல்லச்சாமி

தொண்டாவின் பேரன் தாக்கு

கொழும்பு, ஜூலை 8

செல்லச்சாமி தனது புதைகுழியைத் தானே தோண்டிக் கொண்டார்.

இ.தொ. காவின் புதிய பொதுச் செயலாளராக பதவியேற்றுள்ள 30 வயதான திரு. ஆறுமுகம் தொண்டமான் முன்கண்டவாறு "சண்டே லீடர்" வார இதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மலையகத் தோட்டத் தொழிலாளருக்கு செல்லச்சாமி துரோகம் செய்து விட்டார். எமது குடும்பம்பற்றி அவதூறுகளை அவர் பரப்பி வந்தார். பத்திரிகைகள் மற்றும் முன்னணி அரசியல்வாதிகளின் பின்னால் சென்றால் எல்லாவற்றையும் தீர்த்து விடலாம் என்று அவர் எண்ணியிருந்தார். மலையகத்தில் உள்ள தமிழரை அவர் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை கொழும்பில் தனது மனைவிக்காக தேர்தல் பிரசாரம் செய்வதையே அவர் விரும்பினார்" — என்றார்.

இ. தொ. காவின் தலைமைத்துவத்தை தமது குடும்பச் சொத்தாக தொண்டமான் மாற்றிவிட்டார் என்ற குற்றச்சாட்டு பற்றிக் கருத்து வெளியிடுகையில் —

"தலைமைத்துவத்தை தமது குடும்பச் சொத்தாக தொண்டமான் மாற்றி வருகின்றார் என்றால், ஏன் எனது தந்தை இராமநாதனை (தொண்டமானின் மகன்) இ. தொ. காவில் இருந்து வெளியேற்றினார்? இ. தொ. காவின் தலைவராக எனது தந்தையை அவர் நியமித்திருக்கலாமே! எனது தந்தையின் போக்கு தொண்டமானுக்கு பிடிக்கவில்லை. அதனால் மத்திய மாகாணசபை உறுப்பினராக இருந்த எனது தந்தையை காங்கிரஸில் இருந்தே வெளியேற்றினார். இப்போது எனது தந்தை என்னுடன் வீட்டில் இருக்கிறார்" — என்று அவர் கூறினார்.

இன்றைய நிகழ்ச்சிகள்

சுவாமி விவேகானந்தரின் உலக சமயப் பெருவிழாவின் நினைவாக பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் இன்று பின்வரும் இடங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

★ காலை 8மணி — இமையாணன் மகா வித்தியாலயத்தில் நூல்கள் அன்பளிப்பு

★ மாலை - சந்நிதி முருகன் கோயிலில் விசேட பஜனை வழிபாடு நூல்கள் அன்பளிப்பும். (ஐ)

★ ★ ★

விஞ்ஞானம் செய்முறைத் தேர்வு தொடர்பாக விஞ்ஞான பாட முதன்மை ஆசிரியர்கள் அனைவருக்கும் இன்று வெள்ளிக்கிழமை கனகரத்தினம் ம. ம. வியில் காலை 9.00 மணிக்கு அறிவுறுத்தற் கூட்டம் நடைபெறும். வலயங்கள் 1, 2 முதன்மை ஆசிரியர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு தேர்வு ஆணையாளர் கோருகின்றார். (க)

★ ★ ★

யாழ் வலயம் 1 கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் கணிதப்பகுதி குறிப்பிட்ட பாடசாலைகளில் நடத்திய ஆய்ந்தறிதல் மூலமான கற்பித்தலின் மதிப்பீட்டுத் தேர்வினை 15 தேர்வு நிலையங்களில் இன்று வெள்ளிக்கிழமை நடத்தவுள்ளது குறிப்பிட்ட பாடசாலை மாணவர்கள், கணித பாட ஆசிரியர்கள் தங்கள் தேர்வு நிலையங்களுக்கு காலை 8 30 மணிக்கு வருகை தந்து தேர்வில் பங்குபற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். [ஒ]

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. க. கமலேசுரம் "மனித நேயத்தில் இறைவனின் வழிகாட்டல்" எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். சுவாமி சித்ரூபானந்தா அறிமுகவுரையை ஆற்றுவார். (க)

பாடசாலைகளில்

வரணி மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை முற்பகல் 9 மணிக்கு அதிபர் திரு. ச. துரைராசா தலைமையில் நடைபெறவுள்ளது முதன்மை விருந்தினராக யாழ் கல்வி வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் செல்வி நிலாவதி பெரியதம்பியும், சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கமும் கலந்து கொள்வர். (ஐ-117)

★ ★ ★

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சங்கானைக் கல்விக் கோட்ட மாணவர் தொழில் நுட்ப ஆக்க முயற்சிப் போட்டி நடைபெறும். (க-28)

★ ★ ★

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மாணவர்களின் கண்காட்சி ஒன்று நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். [க-12]

மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்குரிய ஜூலை மாதத்திற்கான மண்ணெண்ணெயை உடனடியாக பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதேச சபாளர் க. குணராசா அறிவித்துள்ளார். (இ-17)

தேர்தலில் மட்டக்களப்பு அரச அதிபர்

மட்டக்களப்பு அரச அதிபர் மௌனகுருசாமியும் தமது பதவியை இராஜினாமாச் செய்து விட்டு ஐ. தே. க. சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடவிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ)

வீதி திருத்தம்

நீண்டகாலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக காணப்பட்ட எழுதுமட்டுவாழ் — கிளாலி வீதி செப்பனிடப்பட்டுள்ளது.

பளை பிரதேச சபையினால் இவ் வீதி திருத்த வேலைக்கு ரூபா நாலு லட்சம் ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குன்றும் குழியுமாக காணப்பட்ட கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து மிருசுவில் வைத்தியசாலை வரை திருத்தப்பட்டுள்ளது. (க-117)

96 A/L
Pure - App
Mr. குணசிங்கம்
B, Sc (Hons)
ஆரம்பம்
10 - 07 - 94
ஞாயிறு 4 P.M.
பிரத்தியேக
நியு
சயன்ஸ் சென்ரர்
எழிலகம் முன்
யாழ்ப்பாணம்
(சி/8720)

கல்வியை திட்டமிட்டு நசுக்குவதே ஸ்ரீலங்கா அரசின் நோக்கம்

கல்லூரி விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 8

தேசிய பாடசாலைகளினூடாக கல்வியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து கல்வியைத் திட்டமிட்டு நசுக்குவதே ஸ்ரீலங்கா அரசின் நோக்கமாகும்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த விழாவில் பேசிய முறைசாராக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. சுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவுப் பேருரையும் கடந்த 2ஆம் திகதி நடைபெற்றன. விழாவுக்குக் கல்லூரி அதிபர் திரு வி. மாணிக்கம் தலைமை வகித்தார்.

திரு சுப்பிரமணியம் மேலும் பேசும்போது கூறியதாவது;

கல்வி பெறும் பொருட்டு இங்கு ஆண்டு ஒன்றில் சேரும் இருபதினாயிரம் மாணவர்கள் ஆண்டு பதினொன்றில் பத்தாயிரமாகக் குறைந்து இறுதியில் சுமார் நானூறு பேர்களே பல்கலைக்கழகம் செல்கிறார்கள். பல்கலைக் கழகத்தில் புதிய தொழில் துறைப்பீடங்களை உருவாக்க அனுமதியில்லை. பல்வேறு பீடங்களையும் குறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான அரசு திட்டமிட்டு நடத்தும் சோதனைகளை வென்று நாம் தமிழீழக் கொள்கைக்குப் பொருத்தமான வளங்களைப் பயன்படுத்தக் கூடியதான கல்வி முறையை உருவாக்க வேண்டும்.

நல்லூர்க் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் பேசும்போது கூறியதாவது;

ஏழைகளும் சிறந்த கல்வி பெற்று சமூகத்தில் உரிய அந்தஸ்தைப் பெற வேண்டும் என்ற திரு. கனகரத்தினத்தின் இலட்சியப் பற்றோடு சமூகத்தை உயர்த்த வேண்டிய கடமை எமக்குரியது என்றார்.

வைத்திய கலாநிதி ம. கணேசரத்தினம் நிறுவுநர் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

மாணவர்கள் தமது கல்வியை இந்த நாட்டுக்குப் பயன்படுத்த வேண்டும். இன்று லண்டனில் மட்டும் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் டாக்டர்களாக உள்ளனர். இங்கோ டாக்டர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என்றார் அவர்.

முன்னதாக திரு. சுப்பிரமணியம், முன்னாள் அதிபர் திரு. மு. இராமலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள். திரு. சுப்பிரமணியம் பரிசில்களை வழங்கினார்.

செல்வி ம. வினிதா, செல்வன் கு. குணசுதன், செ. பிரதீபன், கலாநிதி மோகனதாஸ் ஆகியோரும் பேசினார்கள்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (க-111)

PERSONAL CLASS
இல: 19, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.
A/L 96
கணக்கியல்
வகுப்புகள் ஆரம்பம்:
சனி 09-07-1994
பி. ப. 1.00 மணி
By:
A. S. A,
கலைச்செல்வன்
(31806)

கிக்ஸ்
அக்கடமி
K.K.S. வீதி, தாவடி.
A/L - '96

பொருளியல்	சனி. ஞா.
கனகரன்	2 — 3
இ. நாகரிகம்	செ. வி.
பாலசு	4 — 5
தமிழ்	தி. வெ.
குழந்தை	5 — 6
அரசியல்	சனி. ஞா.
கியூபட்	4 — 5

ஆண்டு 5 தொடக்கம்
O/L புதிய பிரிவுகளும்
ஆரம்பமாகிவிட்டன.
[7509]

கல்வியங்காடு திருவருள்மிகு
இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோயில்
மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே,

இவ்வருடம் 29 - 07 - 94 வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு துவஜாரோகணமாகி (கொடியேற்றம்) தொடர்ந்து 12 தினங்கள் மஹோற்சவம் நடைபெற அம்பிகை திருவருள் பாலித்துள்ளார்.

விசேஷ உற்சவங்கள்

1 ஆம் நாள்	29-7-94	வெள்ளிக்கிழமை துவஜாரோகணம்
8 ஆம் நாள்	5-8-94	வெள்ளிக்கிழமை இரவு மஞ்சத்திருவிழா
9 ஆம் நாள்	6-8-94	சனிக்கிழமை இரவு குதிரை வாகனத் திருவிழா
10 ஆம் நாள்	7-8-94	ஞாயிற்றுக்கிழமை இரவு சப்பறத் திருவிழா
11 ஆம் நாள்	8-8-94	திங்கட்கிழமை காலை தேர்த்திருவிழா
12 ஆம் நாள்	9-8-94	செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தோற்சவத் திருவிழா

அன்று மாலை திருவூஞ்சல் துவஜாவரோகணம் (கொடி இறக்கம்) நடைபெறும்.

இங்ஙனம்
பொ. கிருஷ்ண மூர்த்தி சர்மா
ஆலய நிர்வாகம்
சு. பாலசுப்பிரமணிய ஐயர்
ஆலய உரிமையாளரும் ஆதீனகர்த்தாவும்
(31810)

அல்வாய் வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
மஹோற்சவம் இன்று ஆரம்பம்

விசேட உற்சவங்கள்

08 - 07 - 1994	வெள்ளி கொடியேற்றம்
09 - 07 - 1994	சனி நவசக்தி அர்ச்சனை
12 - 07 - 1994	செவ்வாய் மாணிக்கவாசகர் குருபூசை
13 - 07 - 1994	புதன் பக்தி முக்தி பாவனா உற்சவம்
14 - 07 - 1994	வியாழன் திருவிளக்குப் பூசை
18 - 07 - 1994	திங்கள் சுமங்கலி பூசை
19 - 07 - 1994	செவ்வாய் பூங்காவனம்
20 - 07 - 1994	புதன் வேட்டை, சப்பறம்
21 - 07 - 1994	வியாழன் காலை 9-00 மணி இரதோற்சவம்
22 - 07 - 1994	வெள்ளி காலை 6-00 மணி தீர்த்தோற்சவம்
26 - 07 - 1994	செவ்வாய் வைரவர் மடை

உற்சவ காலத்தில் தினசரி
மாலை 7 மணி முதல் 8 மணி வரை
மகாபாரதம்
தொடர் சொற்பொழிவு
நிகழ்த்துபவர்:
வாகீச கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.
- இடைக்கால பரிபாலன சபை.
[சி-8718]

தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்த முஸ்தீபு

கொழும்பு, ஜூலை 8

ஆகக் குறைந்த மாதச் சம்பளமாக 3ஆயிரம் ரூபா அரச ஊழியருக்கு வழங்கும்படி கோரி முழு அளவிலான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அரச துறையைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகரிக்கும் ஒவ்வொரு வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கும் ஐந்து ரூபாவும், ஆகக் குறைந்த மாதச் சம்பளமாக 3ஆயிரம் ரூபாவும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரி அரச துறைத் தொழிற்சங்கங்கள் கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை அரச அலுவலகங்கள் முன்பாக மறியற்போராட்டம் நடத்தின.

இப்போராட்டம் நூற்றுக்கு நூறு வெற்றியளித்ததாக அரச துறைத் தொழிற்சங்கங்களின் சம்மேளனத் தலைவர் டபிள்யு எச். பியதாஸ தெரிவித்திருக்கிறார்.

இப்போது இரண்டரை லட்சம் அரச ஊழியர்களின் கையொப்பத்துடன் கூடிய மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மகஜருக்கும், நடத்தப்பட்ட மறியற் போராட்டத்துக்கும் அரசு செவிசாய்க்கத் தவறும் பட்சத்தில், எதிர்வரும் 15ஆம் திகதி முதல் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (இ-எ-6)

இடம்பெயர்ந்தோருக்கு தனியான வாக்கு பெட்டிகள்

இடம்பெயர்ந்தவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் வாக்களிப்பதற்காக தனியான வாக்குப்பெட்டிகள் சகல வாக்களிப்பு நிலையங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் என்றும்—

இடம்பெயர்ந்தோர் தமது வாக்குகளை அத்தனிப்பெட்டிகளில் போடவேண்டும் என்றும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்தோர் தமது விண்ணப்பங்களை கிராம அதிகாரியின் கையொப்பத்துடன் சம்பந்தப்பட்ட மாவட்டக் கச்சேரியில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை— இடம்பெயர்ந்தோர் வாக்காளராக விண்ணப்பிப்பதற்கான காலஎல்லை கடந்த 4ஆம் திகதி முதல் மேலும் ஒருவாரகாலத்துக்கு நீடிக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் உத்தரவாதமளித்திருக்கிறார் என்று கொழும்புத் தமிழ் வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)

சேதமடைந்துள்ள

பாடசாலைகளைத் திருத்த கல்விப் பகுதி நடவடிக்கை

கூரைத்தகடு வழங்க ஏற்பாடு

வலிகாமம் தெற்கு, ஜூலை 8

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் பலவற்றின் கூரைத் திருத்த வேலைக்காக கூரைத் தகடுகளை (அஸ்பெஸ்டஸ் சீற்) வழங்க யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

வான்செயல்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்துள்ள பாடசாலைக் கட்டடங்களின் கூரைகளை சீர்செய்யவும்—

தற்காலிகமாக அமைக்கப்படும் கொட்டகைகளுக்கு பாவிக்கவும் என இக் கூரைத் தகடுகள் வழங்கப்பட உள்ளன.

பாடசாலைத்திருத்தவேலைகளுக்கு தேவையான கூரைத் தகடுகள்யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு அண்மையில் எடுத்து வரப்பட்டு களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளதாகவும்—

கோட்ட ரீதியாக இவை தேவைப்படும் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட உள்ளதாகவும் தெரியவருகின்றது.

கூரைத் தகடுகளை பங்கீடு செய்வதற்கு வசதியாக பாடசாலை அதிபர்களிடமிருந்து பாதிக்கப்பட்ட கட்டடங்களின் அளவுகள், போடப்பட வேண்டிய கொட்டகைகளின் அளவுகள் மற்றும் அவற்றுக்குத் தேவையான கூரைத்தகடுகள் போன்ற விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் தத்தமது கோட்டங்களுக்கூடாக இவ்விவரங்களை கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். [எ-158]

விறகுகாலைகளில் பழைய இறாத்தல் படிகள் பாவனை

கொழும்புத்துறை, ஜூலை 8

யாழ்ப்பாணம் மாவட்டத்தில அனேகமான தனியார் விறகு காலைகளில் பழைய இறாத்தல் படிகளே இன்னும் பாவிக்கப்படுகின்றன.

இப்படியானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். செயலக அளவைகள், நிறுவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் எச்சரித்துள்ளார்.

விறகு காலைகளில் பயன்படுத்தப்படும் படிகள், தராசுகளுக்குக் கட்டாயம் முத்திரையிட்டுக்கொள்ள வேண்டும் என்றும்—

யாழ். நகரில் விறகு காலை உரிமையாளர்கள் பலர் இன்னும் தமது தராசுப்படிகளுக்கு முத்திரையிட்டுக்கொள்ளவில்லை என்றும்—

விறகு காலைகள் அனைத்திலும் கிலோகிராம் படிகளையே பாவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-80)

வடக்கு-கிழக்கு

அகதிகளின் பராமரிப்புக்கு ஜேர்மன் அரசு நிதி உதவி

கொழும்பு, ஜூலை 8

வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக, உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழும் அகதிகளின் நல்வாழ்வுக்காக ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு 90 லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

யுனிசெப் நிவாரண நிதியத்தின் ஒரு பகுதியாக இந்த உதவி வழங்கப்பட்டிருப்பதாக, கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் அகதிக் குடும்பங்களுக்கு அவசர உதவி வழங்கப்பட வேண்டும் என்று யுனிசெப் அமைப்பின் அவசர நிவாரண, புனர்வாழ்வுத் திட்டம் சிபார்சு செய்துள்ளது. இந்த அடிப்படையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள அனைவருக்கும் அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஊடாக நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்றும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் அரசு தற்போது வழங்கியுள்ள பணம், அகதி முகாம்களின் நீர்விநியோகம் மற்றும் சுகாதார நிலைமைகளை அபிவிருத்தி செய்ய பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மை அன்பே குடும்பத்தின் செல்வம்

உழைத்து வாழ்வதே முறையான செல்வம்

வடக்குக்கு சரக்கு கப்பல்களை ஒழுங்கு செய்வதில் குளறுபடி!

கொழும்பு, ஜூலை 8

வடபகுதிக்கு உணவு மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக சரக்குக் கப்பல்களை வாடகைக்கு அமர்த்தும் விடயத்தில் ஆண்டு தோறும் 4 கோடி ரூபா வீண் விரயம் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஒரு நாளைக்கு 8 ஆயிரம் அமெரிக்க டொலர் வாடகைக்கு அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் கப்பல்களை வாடகைக்கு அமர்த்தி வருவதாகவும் —

தினம் 8 ஆயிரத்து 400 அமெரிக்க டொலர் அல்லது அதற்கும் குறைந்த பணத்தில் வாடகைக்குக் கப்பல்களை அமர்த்த முடியும் என்றும்

கப்பல் கம்பெனிகள் தெரிவித்திருப்பதாக ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது.

வாடகைக்கு கப்பல்களை அமர்த்துவதை டெண்டர் கோரிச் செய்வது என்று கடந்த மார்ச் மாதத்தில் திட்டமிடப்பட்டது என்றும் —

பின்னர் அத்திட்டம் மர்மமான முறையில் கைவிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்குள்ளும் வெளியேயும் உள்ள சிலரின் அழுத்தம் காரணமாகவே அத்திட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள கப்பல்கள் துறைமுகத்தில் வேலை இன்றி தரித்து நிற்கும் காலத்துக்கும் வாடகை கொடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

கிராம சேவகர் பிரிவுகளில் கிராம அபிவிருத்தித் திட்டம்

நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கிராம அபிவிருத்தி திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் திட்ட செயற்படுத்தல் பணிப்பாளர் நாயகம் திரு. சீ. மாலியத்த வால் சகலபிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் ரூபா 15 ஆயிரத்துக்கும் ரூபா 50 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட பணத்தை செலவழிக்கக் கூடிய திட்டங்களை தயாரித்து அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

விவசாயம் சம்பந்தமான திட்டங்கள் கிராம வீதிகள் மின் சாரவிநியோக திட்டங்கள் நீர்விநியோகத்திட்டம் குழாய்க்கிணறு சுகாதாரத் திட்டங்கள் விளையாட்டு உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், போக்குவரத்து தபால் திணைக்களம், சந்தைப் படுத்தல், சிறுகைத்தொழில் அபிவிருத்தி போன்ற திட்டங்களை இந்த கிராம அபிவிருத்தி திட்டத்தின் மூலம் தயாரிக்க முடியும் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (இ-175)

கரும்புலி மணியரசன் கூறிய இறுதி வார்த்தை உயிராயுதம்

தளபதி சூசை வெளியிட்ட தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

16 வயது நிரம்பிய கரும்புலி கப்டன் மணியரசன் தாக்குதலுக்குச் செல்வதற்கு ஆறுமணி நேரத்தின் முன் உயிராயுதம் என்ற வார்த்தையை கூறினான். என்னை உயிராயுதமாகப் பயன்படுத்தி தமிழீழ மக்களின் இன்னல்களை விலக்குவேன் என்றும் அவன் சொன்னான்.

கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை இத்தகவலை வெளியிட்டார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற கரும்புலிகள்நாள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

1987 ஆம் ஆண்டில் வடமராட்சிப் பகுதி மீது இராணுவம் மேற்கொண்ட தாக்குதலின் போது 28 புலிகள் வீரச்சாவடைந்தனர். சுமார் 800 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரம் இளைஞர்கள் வரை கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் அடைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் எம்மைப் பாதுகாப்பார்கள் என்ற மக்களின் நம்பிக்கை சிதறடிக்கப்பட்ட அந்த சமயத்தில் — நாம் 180 போராளிகளுடனும் 100 ஆயுதங்களுடனும் மட்டும் இருந்தோம்.

அந்த சமயத்தில்தான் கரும்புலி மில்லர் தன்னை ஒரு உயிராயுதமாகப் பாவித்து நெல்லியடி படை முகாமை தகர்த்து இராணுவத்தை நிலைகுலையச் செய்தான்.

முன்னர் குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் கொழும்புக்கு சென்று தற்கொலைப் பாணியிலான தாக்குதல் ஒன்றை நடத்த முடிவு செய்தோம். ஆனால் பின்னர் தடைகள் காரணமாக அந்த முயற்சி கைகூடவில்லை.

எதிரியின் பலமான கோட்டைகளை ஊடறுத்துச் செல்லத்தயாரான உயிராயுதங்களாக இன்று கரும்புலிகள் விளங்குகிறார்கள். காலத்தின் தேவைக்கு ஏற்ப இந்த உயிராயுதங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப் படும்.

எத்தகைய தாக்குதலுக்கும் தயாராக — பலம் வாய்ந்த ஓர் அணியாக — கரும்புலிகள் உருவாக்கப்பட்டு வருகிறார்கள் — என்றார். (ஐ-8)

அரசியலிலும் மாற்றங்களை ஏற்படுத்திய கரும்புலிகள்

அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 8

போராட்டத்தில் இராணுவ ரீதியில் மட்டுமல்ல, அரசியல் ரீதியிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் கரும்புலிகள் ஆவர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்பட்ட கரும்புலிகள் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி முன் கண்டவாறு தெரிவித்தார்.

உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் போராட்டத்தில் வெற்றிபெற எத்தகைய பெரிய ஆயுதங்களை வாங்கலாம் என்பது குறித்தே சிந்திக்கின்றது. ஆனால் நாம் எமது மிகப்பெரிய ஆயுதமாக உயிராயுதத்தையே கொள்கிறோம். அதனைக்கொண்டே எதிரியின் பலத்தை உடைக்கிறோம். — இவ்வாறு செல்வி தணிகைச் செல்வி அங்கு மேலும் தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முதன்மைச் செயலகத்தில் திரு. கந்தன் ஐயா தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கரும்புலித் தாக்குதல்கள் எமது போராட்டத்தில் திருப்பு முனை

நெல்லியடிக் கூட்டத்தில் கரிகாலன்

''எமது போராட்டத்தின் ஒவ்வொரு பரிமாணத்திலும், கரும்புலிகளின் வெற்றிகரத் தாக்குதல்கள் போராட்டத்தை திசை திருப்பியுள்ளன. முப்படைகளின் பாரிய இராணுவ நடவடிக்கை முயற்சியை தடுத்து நிறுத்தும் தாக்குதல்களை கரும்புலிகள் நடத்தி சாதனை படைத்துள்ளனர்.''

தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் மேற்கண்டவாறு கூறினார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அரங்கில் நடந்த கரும்புலிகள் நாள் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

இடிந்த கட்டடங்களையும், சிதைந்த இடிபாடுகளையும் நாம் இங்கு காண்கிறோம். இந்த இடிபாடுகளுக்குள் தான் கப்டன் மில்லரின் உடல் சின்னாபின்னமாகியது.

கப்டன் மில்லர் மேற்கொண்ட சாதனையின் நாளான இன்று கரும்புலிகள் நாளாக அனுஷ்டித்து, சகல கரும்புலிகளுக்கும் அஞ்சலி செய்கிறோம்.

ஸ்ரீலங்காவின் முப்படைகளும் சேர்ந்து பெரிய திட்டம் தீட்டி தமிழ் மக்களை அழிக்க நடவடிக்கை எடுத்த போது தலைவரின் சிந்தனைப் பொறியில் உருவான மில்லர் அந்தத் திட்டத்தை தவிடு பொடியாக்கினான்.

அந்த பாரிய திட்டத்தை நிறுத்தியது மட்டுமல்ல, இராணுவத்தினருக்கும் பாரிய இழப்பை ஏற்படுத்தினான்.

எமது தாயகப்பிரதேசத்தை கைப்பற்றும் நோக்கில்— 1956முதல் 88 வரை 8இனக் கலவரங்களை நடத்தியும், சிங்களக் குடியேற்றங்களை அமைத்தும் ஸ்ரீலங்கா அரசு செயற்பட்டன.

90 ஆம் ஆண்டு 2ஆம் ஈழப் போர் ஆரம்பித்த பின்னர்— கருகிய சடலங்கள், சாக்குகளில் எலும்புக் கூடுகள், [illegible] சடலங்கள், பாலியல் வன்முறை என்று இனப்படுகொலை தொடர்ந்தது.

இந்நிலையில் தான் இதைத் தடுக்க கரும்புலி படை உருவானது.

''பலம்பெருந்திய இராணுவ சக்தி வாய்ந்த படையாக கரும்புலிகள் உருவாக வேண்டும். கரும்புலிகள் சகாப்தத்தில் விடுதலை பெறவேண்டும்'' என்று எமது தலைவர் கூறினார்.

இக்கரும்புலிகள் பலவித தாக்குதல்களுக்குச் செல்கிறார்கள். உடல் பரப்பில் சாவு நெருங்கும் நேரத்தில் கூட ஆவேசத்துடன் செல்கிறார்கள்.

இனப் படுகொலையில் இருந்து எமது இனத்தை காக்கும் இறுதி மூச்சுடன் தமது இன்னுயிரை தற்கொடையாக்குகிறார்கள்.

எமக்கென்று நாடு, இனம், பிரதேசம் அரசு இருக்கும் என்ற அசையாத நம்பிக்கையுடன் அவர்கள் களம் புகுகிறார்கள்.

நாம் சிறந்த தலைவனை பெற்றுள்ளோம். சிறந்த இயக்கத்தை பெற்றுள்ளோம். எமது இலட்சியம் நிறைவேற சகலரும் இணையவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

400ஏக்கர் உவர் நிலத்தில் விரைவில் பயிர்ச் செய்கை

அராலி, ஜூலை 8

கடல்நீர் உட்புகுந்து கடந்த பல ஆண்டுகளாக பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாமல் இருந்த அராலிப் பகுதியைச் சேர்ந்த சுமார் 40ஏக்கர் நெல்வயல்கள் எதிர்வரும் கால போகத்தில் மீண்டும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட உள்ளன.

உவர்த்தன்மையைத் தாங்கி வளரக் கூடிய நெல் இனத்தையும் அவற்றுக்குத் தேவையான இரசாயன உரங்களையும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும் அவர்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் வலி மேற்கு பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்திட்டம் வெற்றி அளிக்குமானால் இப் பிரதேசத்தை சேர்ந்த கைவிடப்பட்டுள்ள பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப் படும் எனவும் தெரியவருகின்றது.

மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

தாயகமீட்புப் போரில் தம்மையே அர்ப்பணித்து வீரச்சாவடைந்த கரும்புலிகளின் நினைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற இச் சிரமதானப்பணியில் பெருமளவான பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இச்சிரமதான வேலையில் துயிலுமில்லம் துப்புரவு செய்யப்பட்டதுடன் மரக்கன்றுகள், பூங்கன்றுகள் வைப்பதற்கான குழிகளும் அமைக்கப்பட்டன. (இ)

ஆயுள்வேத வாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

ஆயுள்வேத வாரம் இம்மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை நாடு முழுவதும் அனுஷ்டிக்கப் படும்

பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் பாடசாலை மட்டங்களில் ஆயுள் வேத வாரம் கொண்டாடப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு ஆயுள்வேத உதவி ஆணையாளர் என். எம். பெரேரா அறிவித்துள்ளார். (இ-17)

அராலியில் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 8

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய கல்விக் கண்காட்சி எதிர்வரும் சனி - ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

காலை 9- 00 மணிக்கு கண்காட்சி ஆரம்பமாகும்.

சங்கானை கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆ. தற்பரானந்தன் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

கணித, விஞ்ஞான போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 8

மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ள கணித விஞ்ஞான வினா விடைப்போட்டி நாளை சனிக்கிழமை காலை (9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறும். வலய மட்டப் போட்டிகளில் ஒவ்வொரு ஆண்டுப் பிரிவிலும் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற போட்டியாளர் மேற்படி போட்டியில் பங்குகொள்வர் எனக் கல்விப் பணிப்பாளர்கள் அறிவிக்கின்றனர்.

பளையில் நடந்த பொருட்காட்சி

தென்மராட்சி, ஜூலை 8

பளை கல்விப் பிராந்திய பாடசாலைகளின் ஆரம்ப பிரிவு மாணவர்களின் பொருட்காட்சி கடந்த வாரம் பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பொருட் காட்சியில் முகமாலைறோ. க. பாடசாலை முதலிடத்தையும் பளைறோ. க பாடசாலை இரண்டாம் இடத்தையும் பளை மத்திய கல்லூரி, வேம்போடு கேணி சி. சி. த. க. பாடசாலை ஆகியவை மூன்றாம் இடத்தையும் பெற்றன. (ஒ—117)

தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 8

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் நானூறுக்கும் அதிகமான தொழில் நுட்ப மற்றும் எழுதுவினைஞர் தரங்களைச் சேர்ந்த ஊழியர்கள் செவ்வாய் முதல் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வுக்கு பதிலாக சம்பளத்தை நிர்வாகம் குறைத்துள்ளதை ஆட்சேபித்து இந்த இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. (உ-எ-6)

* * *

நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 400 படவரைஞர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் சுகவீன விடுமுறை பெற்று ஆட்சேபம் தெரிவிக்கும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

பதினைந்து கோரிக்கைகளை முன்வைத்து இத் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ-எ-6)

பொதுக் கல்வி தேர்வு 13 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுக்குரிய செய்முறைத் தேர்வுகள் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

தேர்வுக்குரிய நுழைவுஅட்டைகளைப் பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் தமது கோட்டங்களில் பெற்றுத் தேர்வு நாடிகளிற் வழங்குமாறு தேர்வு ஆணையாளரால் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

கால் நடை உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து செயற்பட்டு கால்நடை உற்பத்தியை பெருக்கிக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் சகல கால்நடை வளர்ப்போருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

விலங்கு வேளாண்மைத் துறை அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு கால்நடை வளர்ப்போரை ஊக்குவிக்கவும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளவும் என கால்நடை சுகாதாரத் திணைக்களத்துடனும்கூட்டுறவுப் பகுதியினருடனும் இணைந்து கால்நடைவளர்ப்போரை ஒன்றிணைத்து இக் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. (எ)

போஷாக்கு குறைபாட்டை நீக்க

குழந்தைகளுக்கான முட்டை பிஸ்கட்

கொழும்பு, ஜூலை 8

போஷாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்யவும் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து அளிக்கக்கூடியதுமான முட்டை பிஸ்கட்டை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உணவு பதனிடல் பிரிவு அறிமுகப்படுத்தியுள்ளது.

சுகாதார முறைப்படிமதுரம்பான் உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்பட்டு அறிமுகப் படுத்தப்பட்ட இவ் பிஸ்கெட் தற்போது நியாய விலையில் மக்களுக்கு விநியோகிக்கப் படுகிறது.

உள்ளூர் சிறுதானியங்களைப் பயன்படுத்தி பல்வேறு வகையான சுவைமிகு உணவுப் பண்டங்கள் இவ் உற்பத்தி நிலையத்தில் உருவாக்கப் படுகின்றமை குறிப்பிடத் தக்கது. [எ]

எம் மண்ணின் வளம் பெருக

நாம் இங்கு மரம் நடுவோம்

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ரைக்டர் கலப்பை (Australian)யும் 5 H.P., ½ H.P. (3 Phose Current Mortor (England) ஆகியனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நீதிராஜா, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (31776)

பால் இன உத்தமமான சடைச்சண்டி மறி ஆடு விற்பனைக்குண்டு. (1½ மாதம்) தொடர்பு: இல. 3, சினிமா லேன், (தட்டாதெரு சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (31801)

புதிய போட்டோ பிரதி இயந்திரம் - Gestetner Copier 2201 விற்பனைக்கு உண்டு. அதிவரன், இல. 309, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம் (வானவில்லுக்கு அருகில்) (31781)

வெளிவந்துவிட்டது

மாணவர்களுக்கோர் வரப்பிரசாதம் கைவண்ணக் கலைகள். ஆண்டு 9, 10, 11 ஆசிரியர் நா. முத்தாலிங்கம், (C. F. Arts), D T. C. (Ceylon) S. A. V. (Madras) சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். மாணவர்களுக்கு விசேட சலுகையுண்டு. இல. 25, "மல்லிகை வாசம்" டச்சு வீதி, சாவகச்சேரி. (31784)

புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும். (7445)

தேவை

நல்ல பழக்கவழக்கமுள்ள பெண் கொம்பொசிட்டர், பைண்டர், வேலைபழக ஆர்வமுள்ளவர்கள் தேவை; நேரில் வரவும். இல. 23, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (7500)

"சன் பிறான்ட்" இனிப்பு, டொபி வகைகள் சொந்த மிதிவண்டியில் சென்று விற்பனை செய்யக்கூடியவர்கள் தேவை. முற்பணம் செலுத்தக் கூடியவர்கள் வேலை நாட்களில் நேரில் தொடர்பு கொள்ளவும். அளவை, கொன்பக்ஷனறீஸ், பரமானந்தம் மில் கட்டடம், தாவடி, மானிப்பாய் சாலை, கொக்குவில். (31667)

க. பொ. த. சாதாரண வகுப்பிற்கு சமயம், தமிழ் கற்பிக்கக் கூடியவரும், நிர்வாகத் திறமையுடையவருமான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 30 — 45க்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். அனுபவம் நற்சான்றிதழ் பத்திரங்களுடன் 18-07-94 திங்கள் 8-00 மணிக்கு நேரில் சமுகம் தரவும். இயக்குநர் Bitsman,s கல்வி நிறுவனம், மானிப்பாய். (சி-8622)

ஆசிரியர்களுக்கு

முறைப்படி வினாத்தாள் தயாரிப்பதற்கு முன்னோடியான அறிவுத்திறன் மதிப்பீட்டு திட்டத்திற்கான விளக்கப் படிவம் யாழ் சுப்பிரமணிய பொத்தக சாலை, சுன்னாகம் பொத்தக சாலைகளில் கிடைக்கும் ரூபா 1/- (7257)

காவேரி சீயாக்காய்

கண் குளிர்மை, ஞாபக சக்தி, கூந்தல் வளர்ச்சிக்கும், பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதற்கும், முடி உதிர்வதை தடுப்பதற்கும் நீங்கள் பாவிக்க வேண்டியது காவேரி சீயாக்காய்ப் பவுடர். (31688)

பெயர்மாற்றம்

ஸ்ரீ லங்கா அச்சகம், ஸ்ரீகாந்தா அச்சகம் ஒன்றிணைந்து இணையகம் பதிப்பகம் என்ற பெயரில் சேவையாற்றுகிறது. இணையகம் பதிப்பகம், பதிப்பகசாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (31668)

வாடகைக்கு

நல்லூர் MPCS அருகாமையில் அமைந்திருக்கும் கடை ஒன்று வாடகைக்கு கொடுக்கப்படும். விபரங்களுக்கு அருகில் உள்ள அவரது வீட்டில் விசாரிக்கவும். M. சபாரட்னம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (சி-8594)

தவறிவிட்டது

4-7-94 திங்கட்கிழமை இரவு 7-30 மணிக்கு M. D. 90 பின் றிம் ரயர், ரியூப்புடன் இணுவில் ஆஸ்பத்திரிக்கும் மருதனார்மடம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் K வரதராசா, P. S. சேவிஸ் ஸ்ரேசன், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். (31783)

திரு. என். வே. ரகுநாதன் எழுதி அச்சில் வந்த ஆக்கங்கள் ஒட்டி வைத்திருந்த (ஆல்பம்) தொகுப்பு கைதவறி விட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 601/2, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (31800)

மரநாய்கள் தொல்லை

அரியாலை, ஜூலை 8

கொழும்புத்துறை மேற்கு பகுதியில் மரநாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவில் கோழிகளை மரநாய்கள் பிடித்துச்செல்வதாகவும், தெரிவிக்கப்பட்டது.

திருமண அழைப்பு

நிகழும் பவ வருடம் ஆனி மாதம் 25ஆம் திகதி (09-07-1994) சனிக்கிழமை மாலை 4மணி 55நிமிடம் முதல் 5மணி 52நிமிடம் வரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
செல்வசிகாமணி
(சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)
அவர்களுக்கும்

எனது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
கோமளா
(ஆசிரியை றோ. க. பாடசாலை, வல்வெட்டித்துறை)
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணவிழாவில் கலந்து மணமக்களை ஆசீர்வதித்தும், வாழ்த்தியும் ஏகுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி
ம. சுந்தரவிநாயகம்,
(இளைப்பாறிய D.O.A.,
நில அளவைத் திணைக்களம்)
"சண்முக வாசா",
காங்கேசன்துறை வீதி,
வல்வெட்டித்துறை.

திருமதி
நவமணிஅம்மா குழந்தைவேற்பிள்ளை,
(காலஞ்சென்ற இளைப்பாறிய நில அளவையாளர், திரு. குழந்தைவேற்பிள்ளை அவர்களின் பாரியார்)
சனசக்தி வடலி,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

[இரு வீட்டார் அழைப்பு] (7505)

திருமண வைரவிழா, 85 ஆவது பிறந்த தினவிழா

அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் ஆனித்திங்கள் 25ஆம் நாள் சனிக்கிழமை (09-07-1994) பிற்பகல் 2மணியளவில் வரும் சுப நேரத்தில எமது பெற்றோர், தெல்லிப்பழை இயாமாவளவைச் சேர்ந்த

திரு. திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி
(இளைப்பாறிய ஆசிரியர், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை, மகாஜனாக் கல்லூரி)
திருமதி தையல்நாயகி தம்பதிகளின்
திருமண வைரவிழாவினையும்,
எமது தந்தையாரின் எண்பத்தைந்தாவது
பிறந்த தின விழாவினையும்

எமதில்லத்தில் கொண்டாட திருவருள்பாலித்திருப்பதனால், தாங்களும் குடும்ப சமேதராய், அத்தருணம் வருகை தந்து திருமண வைரவிழாக்காணும் தம்பதியினரை வாழ்த்தி, அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தொடர்ந்து நடைபெறும் தேநீர்விருந்துபசாரத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இவ்வழைப்பிதழைத் தனிப்பட்ட அழைப்பிதழாகக் கருதும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்,
வைரவிழாக் காணும் தம்பதியினரின்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாஸ்ரர் சுராஜ்,
பலாலி வீதி, உரும்பிராய்.

நல்லாசிரியையாய் - பிரதி அதிபராய்
பதினாறு ஆண்டுகள் நற்பணி புரிந்து
ஓய்வு பெறும்

திருமதி
சுந்தரகலாவல்லி சிவபாதசுந்தரம்
அவர்களுக்கு

எமது நல்வாழ்த்துக்கள்

சித்திரத் தோடு செறிந்திரு நுண்கலை யானவெலாம்
உத்தி நிறைந்த விளையாட் டெலலாம்- துறைகளெலாம்
நித்தியம் நீயும் திருவாகத் தென்போ-டிலங்கினையால்
இத்தின மோய்வி லுறுமுனை வாழ்கவென்-றேத்துகமே.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
மீசாலை வீரசிங்கம் ம. வி.

(31754)

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் - வரைவுள்ளது

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்க
அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான

கலந்துரையாடல் - 09-07-1994

தமிழீழ பொது நிர்வாக சேவைப் பகுதியினரால் 09-07-94 பிற்பகல் 2. 30 மணிக்கு சங்க கேட்போர் கூடத்தில் நடத்தப்படவிருக்கின்ற மேற்படி கலந்துரையாடலில் சங்கத்தின் சகல அங்கத்தவர்கள், கிளைக் குழுக்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி
கூட்டுறவுச் சேவையில்,

சொலமன் சூ சிறில்
தலைவர்.

திருமதி பு. நவரட்ணம்
செயலாளர்.

(சி-8709)

---

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
03
—
01
—
1929

மறைவு:
08
—
07
—
1990

அமரர் நாகலிங்கம் தேவபாலசுந்தரம்

(இளைப்பாறிய விளையாட்டு அதிகாரி)

உங்கள் அன்புருவம் மறைந்து நான்காண்டுகள்
சென்ற போதிலும்
உங்கள் நினைவலைகளில் எம் உயிர்த்துடிப்பு
என்றென்றும் ஏங்கி நிற்கும்.

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்;
மனைவி, மகன்.

"தேவஸ்தான்",
கைதடி.

(31766)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணரங்கில்:
11
—
02
—
1924

விண்ணரங்கில்:
08
—
07
—
1989

அமரர்

நடிகமணி வி. வி. வைரமுத்து

இசையுடன் நாடகத்தை
இணைத்துமே புதுவடிவம் தந்து
இகமதில் பலரும் போற்றும்
இதிகாச இலக்கியத்தை
கலைமெரு கூட்டிக் காவிய வடிவமாக்கி
காலத்தால் அழியாத நாடகமாக்கி
கலைப் பொக்கிஷம் தந்த
கலைத் தென்றல் நடிகமணி
காலத்தால் அழியாது ஐயா!
உந்தன் கலைப்பணி - தமிழ்ப்பணி.

[illegible]
குடும்பத்தினர்.
(7259)

4ஆவது பிறந்த நாள் வாழ்த்து

08 - 07 - 1994

* செல்வி டாலினி *

பிரிய டாலினி!

உனது அதி உன்னத பெறுபேறுகளான அர்த்தங்கள் பொதிந்த எம் காத்திருப்பு என்றும் இன்பமானது.

பாசத்துடன் அம்மா,
நிறைந்த அன்புடன பழம் மாமா,
மாமி, அன்பு அம்மம்மா
அன்புடன் சித்தப்பாமார், சித்திமார்,
மாமாமார்.

இ. ஜெகதாஸ் (ஈழம்),
680/2, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

(7511)

முதலாம் ஆண்டு அஞ்சலி



தோற்றம்:
05
—
02
—
1914

மறைவு:
19
—
06
—
1993

உபாத்தியாயர் (A K V)

ஸ்ரீமான் அ. க. வேலுப்பிள்ளை

வையத்தில் எமை தக்கோர் என
வாழவைத்த கண்கண்ட தெய்வமே!
இமைப் பொழுதும் எம் நெஞ்சில்
நீங்கா துறைகின்றீர்! தங்களைப்
புத்தியில் வைத்தடி போற்றுகின்றோமே!!

பற்றான;
மனைவி, பிள்ளைகள்,
மருகர், மருகியர்,
பேரர்.

நீர்வேலி.

(7507)

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

பதவி வெற்றிடம்

202. 9. களஞ்சியபபொறுப்பாளர்

சம்பளம்:

165/88 — 11ன்படி $\dfrac{905/- \;—\; 1605/-}{40\text{x}5 \;—\; 30\text{x}10}$

கல்வித் தகைமைகள்:

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 12ஆம் சம்பளத் திட்டத்தில் களஞ்சியப் பொறுப்பாளர்/ விலைக்கு வாங்கல் உத்தியோகத்தர்/ சில்லறை விற்பனை நிலைய மேற்பார்வையாளர்/ சில்லறை விற்பனை நிலைய முகாமையாளர் ஆகிய பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 13ஆம் சம்பளத்திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் நாலு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் பொருள்கள் வழங்கல்/ பொருள்கள் முகாமை விற்பனையில் பற்றிய டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் களஞ்சிய நிருவாகப் பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

(இ) கூட்டுறவுசங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/ க. பொ. த. (உயர்தரம்) சான்றிதழ் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் களஞ்சிய நிருவாக பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

பொது:

01: வயது:

23க்கும் 40க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (தற்போது கூட்டுறவுச் சங்க பணியாளராக இருப்பவர்களுக்கு இவ்வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

02: வசிப்பிடம்:

குறைந்தபட்சம் 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

03 பிணைப்பணம்:

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் சட்ட விதிகளுக்கு அமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையை செலுத்துதல் வேண்டும்.

04. விண்ணப்பத்துடன் உள்ளடக்கப்பட வேண்டியவை:

கல்வி, பிறப்பு, அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 21-07-1994 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'களஞ்சியப் பொறுப்பாளர் பதவி' என குறிப்பிட்டு கீழ்காண் விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

— தலைவர்:

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி-8716)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

துன்புறுத்தலில் ஓர் இன்பமா?

வடக்கே— யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு— வரும் கப்பல்கள் கொழும்பிலிருந்தோ, திருகோணமலையிலிருந்தோ இனிமேல் நேர பருத்தித்துறைக்கு வரமுடியாது காங்கேசன்துறைக்குச் சென்று கடற்படையினர் சோதனை நடத்திய பின்னரே இங்கு வரலாம்!

இது சம்பந்தமான உத்தரவை கடற்படையினர் பிறப்பித்துள்ளனர். அந்த உத்தரவு நேற்றுத் தொடக்கம் நடைமுறைக்கும் வந்துவிட்டது. உணவுக் கப்பல்களாயினும்சரி, பயணிகள் கப்பல்களான ''பிளாம்பயன்'', ''நரோமா'' ஆயினும் சரி காங்கேசன்துறையில் கடற்படையினர் சோதனையிட்ட பின்னரே பருத்தித்துறைக்கு இனிவரமுடியும்.

கடந்த பல மாதங்களாக பயணிகள் மற்றும் உணவுக் கப்பல்கள் நேரே பருத்தித்துறைக்கு வந்து திரும்பின. குடாநாட்டிற்கான கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்ட புதிதில் கப்பல்கள் காங்கேசன்துறைக்கு சென்று, அங்கு கடற்படையினரின் சோதனை முடிந்த பின்னரே பருத்தித்துறை வந்தன. இந்த ஏற்பாட்டினால், நடைமுறையில் பயணிகளுக்கு வேண்டாத சிரமங்களும் தொல்லைகளும் உண்டாகின. அதேபோல, உணவுப் பொருள்கள் வந்து சேர்வதிலும் நீண்ட கால தாமதங்கள் உண்டாகின. அதன் பெறுபேறாக உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடும், அதன் காரணமாக விலை உயர்வுகளும் தலைதூக்கின.

சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்தக் கஷ்டங்கள், சிரமங்கள், தாமதங்களை விளக்கியதன் பேரிலேயே அந்த நடைமுறை நீக்கப்பட்டது. அவ்வாறிருக்க இப்போது திடீரென மீண்டும் அதேமுறை கொண்டுவரப்பட்டது ஏன்? ''பாதுகாப்புக் காரணம்'' என்று வெறுமனே கூறிக்கொண்டு, தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட எந்த விவகாரத்திலும் தமது நாட்டாண்மையைக் காட்டலாம் என்ற அதிகாரச் செருக்கு கொழும்பு அதிகாரிகளுக்கும், படை அதிகாரிகளுக்கும் இருப்பதாலா?

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வரும் கப்பல்கள் புறப்படும் துறைமுகங்களிலேயே, சகல சோதனைகளும் நடத்தப்படுகின்றன. கடற்படையினர் மட்டுமன்றி இராணுவத்தினர் கூட கப்பல்களில் பொருள்கள் ஏற்றப்படுவதற்கு முன்னர் அக்குவேறு ஆணிவேறாகச் சோதிக்கின்றனர். பிரயாணிகளும் பலத்த சோதனைக்கு ஆளாக வேண்டியுள்ளது.

அப்படியிருக்க கப்பல்களைக் காங்கேசன்துறையில் சோதனை இட வேண்டும் என்பதன் நோக்கம் என்ன? கொழும்பில் அல்லது திருகோணமலையில் படையினர் நடத்தும் சோதனைகளில் படையினருக்கே திருப்தி இல்லையா? அங்கிருப்பவர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்று கடற்படை மட்டம் சந்தேகப்படுகிறதா? அதுவே காரணம் என்றால், தண்டிக்கப்பட வேண்டியவர்கள் அக்கரையில் உள்ள படையினரே அன்றிக் குடாநாட்டுத் தமிழ் மக்கள் அல்லவே!

காரணம் அது இல்லை என்றால் —

கொழும்பில் அல்லது திருகோணமலையில் சோதனையை முடித்துக் கொண்டு புறப்படும் கப்பல்கள், வடக்கு நோக்கி வந்து கொண்டிருக்கும்போது, நடுக்கடலில் வைத்து தமது பாதுகாப்புக்குக் குந்தகமான ஆயுதங்களோ, ஆட்களோ ஏற்றப்படலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் அஞ்சுகின்றனர்களா? அவ்வாறு நடப்பதாக வைத்துக் கொண்டால் கூட அதற்கும் தவறிழைப்பவர்கள் கப்பல் மாலுமிகளே! தமிழர்கள் அல்லர்!

எனவே காங்கேசன்துறையில் கப்பல் சோதிக்கப்பட வேண்டும் என்பது, தமிழ் மக்களுக்கு வேண்டுமென்று தொல்லைகளையும், கஷ்டங்களையும் கொடுப்பதற்கே அன்றி வேறு எதற்கும் அல்ல. தமிழர்களை இவ்வாறு துன்புறுத்துவதில் அரசினருக்கும், படையினருக்கும் ஓர் அலாதியான இன்பம்!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு புதிய நிர்வாக அலகுகள்

எதிரணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக புவியியல், பொருளாதார மற்றும் சமூக அம்சங்களின் அடிப்படையில் புதிய நிர்வாக அலகுகள் அமைக்கப்படும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி யோசனை தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்று கடந்த வாரம் சிறுபான்மை அரசியல் கட்சிகளிடம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினால் சமர்பிக்கப்பட்டது.

இந்த யோசனைகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறுகின்றது.

இந்த யோசனைத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள பிரதான அம்சங்கள் வருமாறு

★ உண்மையான. போதுமான அதிகாரப் பரவலாக்கல்

★ யுத்தத்தை நிறுத்துவது

★ முறையான அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள புதிய நிர்வாக அலகுகள் அமைப்பது

★ புதிய நிர்வாக அலகுகள் புவியியல் பொருளாதார மற்றும் சமூக அம்சங்களின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைக்கப்படும்.

★ சகலஇனங்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்த பின்னர் இது தொடர்பான அரசமைப்புத்திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

★ புதிய திட்டம் அமுலுக்கு வரும்வரை மாகாண சபை முறை தொடரும்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில்

ஒரு கோடி வாக்குச் சீட்டுகள் 8 நாட்களில் அச்சிடப்படும்!

கொழும்பு, ஜூலை 8

வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்காக பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விசேட கடதாசிகள் கொள்கலன்களில் சீல் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன என்றும்—

வேட்பு மனுத் தாக்கல் செய்வது முடிந்தவுடன் வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கொள்கலன்கள் அடுத்த வாரம் அரச அச்சக அதிகாரிகள், பொலிஸார் மற்றும் கணக்காளர்கள் முன்னிலையில் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரச அச்சகத்தில் தற்போது பொருத்தப்பட்டுள்ள நவீன இயந்திரங்கள், சுமார் ஒருகோடி வாக்குச் சீட்டுகளையும் 8 நாட்களில் அச்சடித்துவிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படும் வேளையில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வாக்குச் சீட்டு அச்சிடப்படும் கடதாசிகள் எண்ணப்பட்டு, அச்சு இயந்திர இயக்குநரிடம் வழங்கப்படும் என்றும்—

வாக்குச் சீட்டு அச்சிடப்படும் சமயம் ஒவ்வொரு அச்சு இயந்திரத்திற்கு அருகிலும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் காவலில் ஈடுபடுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தெரிவத்தாட்சி அதிகாரிகளான அரச அதிபர்கள் அச்சடிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளை அரச அச்சகத்தில் இருந்து ஆயுதப்பாதுகாப்புடன் தங்கள் பகுதிகளுக்கு எடுத்துச் செல்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-எ)

தென்னிந்திய திருச்சபையின்

கொழும்புத் தேவாலயத்தை படையினர் குடைந்தனர்!

கொழும்பு, ஜூலை 8

கொழும்பில் உள்ள தென்னிந்தியதிருச்சபையின் தேவாலயம் படையினரால் குடைந்தெடுக்கப்பட்டது.

கடந்த மாதம் 28 ஆம் திகதியன்று பிற்பகல் 2 மணியளவில் தேவாலயத்துக்குள் புகுந்த படையினர் சுமார் நான்கு மணிநேரம் தேவாலயத்தையும் தேவாலய வளவில் இருந்த போதகரின் வீட்டையும் குடைந்து சோதனையிட்டதாகவும் பொருள்களைத் தாறுமாறாக வீசி சோதனையிட்டதாகவும் தேவாலயவட்டாரங்கள் தெரிவித்தன.

சோதனை நடவடிக்கையின் போது தேவாலய போதகர் வண ஜெபநேசனும் அவரது குடும்பத்தவர்களும் மட்டமான முறையில நடத்தப்பட்டதாகவும்—

அச்சமயம் தேவாலயத்தில் ஆராதனைக்குச் சென்றவர்களை படையினர் தேவாலய வளவில் இருத்தி வைத்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

திருச்சபைத் தேவாலயத்தில் படையினர் புகுந்து குழப்பம் செய்திருப்பது குறித்து கிறிஸ்தவ மத வட்டாரங்கள் விசனம்தெரிவித்துள்ளன.

ஈழத்தமிழர்களுக்காக வெளி உலகத்தில் குரல் எழுப்பி வரும் மத நிறுவனங்களில் தென்னிந்திய திருச்சபையும் ஒன்றாகும். (உ)

எதிரணி ஆட்சியில் பாண் விலை ரூ 3·50!

பிரசாரக் கூட்டத்தில் சந்திரிகா

கொழும்பு, ஜூலை 8

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் பாணின் விலை 3 ரூபா 50 சதமாக குறைக்கப் படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

முன்னணியின் ஆட்சியில் பிரதமராக வரும் வாய்ப்பைப் பெற்றுள்ள சந்திரிகா கொலன்னாவையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் இதனை அறிவித்தார்.

இவ்விலை குறைப்பு எப்படிச் சாத்தியமாகும் என்ற விவரங்களை வெளியிட மறுத்த சந்திரிகா ''அது ஒரு இரகசியம்''— என்று தெரிவித்தார். உ-எ)

ஆளும் கட்சியின் வெற்றிக்கு இராஜதுரை நடத்திய யாகம்

கொழும்பு, ஜூலை 8

ஆளும் கட்சியின் வெற்றிக்காக வேண்டி பெரும் செலவில் யாகம் ஒன்றை நடத்தினார் முன்னாள் அமைச்சர் இராஜதுரை.

மலேசியாவில் இலங்கைத் தூதராகப் பணிபுரியும் இராஜதுரை கொழும்பு வந்து வெள்ளவத்தையில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் இந்த யாகத்தை நடத்தினார்.

பொதுத்தேர்தலில் கிழக்கில் போட்டியிடும் எண்ணமும் அவருக்கு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா ஆட்சிக்கு வந்தால்

காலிமுகத்திடலில் நிறுத்தி அமைச்சர்கள் விசாரணை

ஊழல் புரிவோருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 8

நான் ஆட்சிக்கு வந்தால் ஊழல் புரியும் அமைச்சர்களை காலிமுகத்திடலில் நிறுத்தி வைத்து விசாரிப்பேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித்தலைவர் சந்திரிகா குமாரணதுங்க முன்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

கொலன்னாவ, கொடிகாவத்தையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சிப் பிரசாரக்கூட்டத்தில் பேசியபோது இதனை அவர் தெரிவித்தார்.

ஊழல் புரியும் அமைச்சர்களுக்கு எதிராக தாம்பதவிக்கு வந்த பின்னர் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் அவர் அக்கூட்டத்தில் தெரிவித்தார்.

(உ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

08 –07 – 1994

வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி — நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம் அறிமுகமாவது'' ஒ கனடா'' எனும் நாவல் அதனை அடுத்து சிறுகதை — ''நிலவல்ல அவள் நெருப்பு'' சிறுகதையை அடுத்து கவிதைகள்
1. 'உண்மை''
2. ''கரும்புலி''

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — அரசியல் அரங்கம் '' கடுகு சிறிது ஆனால் காரம் பெரிது''

★ 8-50 — வாத்தியகானம்

09 –07 – 1994

சனி காலை

★ 7-02 — மாவீரவணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 —செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

''ஈழம்'' என்ற ''லேபிளை'' கைவிட்டது ஈரோஸ்!

கொழும்பு, ஜூலை 8

ஈரோஸ் அமைப்பு 'ஈழம்' என்பதைக் கைவிட்டுவிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈரோஸ் அமைப்பின் அரசியல் பிரிவு ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈ. டி. எவ்) என்ற பெயருடன் இயங்கி வந்தது.

1989இல் இந்த அமைப்பு சுயேச்சைக்குழுவாகப் போட்டியிட்டது.

இப்போது அதன்பொதுச் செயலாளர் சங்கர்ராஜி தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள மனுவில்—

ஈழவர் ஜனநாயக முன்னணி என்ற பெயரில் அமைப்பு ஏதும் இல்லை என்றும்—

ஈரோஸ் அமைப்பை அரசியல் கட்சியாக அங்கீகரிக்கும்படியும் கோரியுள்ளார்.

இவ்விண்ணப்பம் பரிசீலனையில் இருப்பதாகவும்—

வேட்புமனுத் தாக்கல் ஆரம்பமாவதற்கு முன்பு இது குறித்த தீர்மானம் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் ஈரோஸ் பொதுச் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

''எமது அங்கீகாரம் கிடைக்கின்றதோ இல்லையோ ஆகஸ்ட் தேர்தலில் வேறு இரண்டு தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிடுவதற்காக முன்னணி ஒன்றை அமைத்துள்ளோம்''— என்று சங்கர்ராஜி தெரிவித்தார்.

ஈழப் புரட்சிகர மாணவர் (ஈரோஸ்) என்ற பெயரில் உள்ள இந்த அமைப்பு 'ஈழம்' என்ற 'லேபிளை' கைவிட்டு விட்டதாகவும்—

கிரேக்க மொழியில் காதல் தெய்வம் என்பதைக் குறிக்கும் 'ஈரோஸ்' என்ற பெயரில் அக்கட்சியைப் பதிவு செய்ய முடிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ-எ)

போதையில் துப்பாக்கிச் சூடு!

இலங்கைதமிழ்இளைஞருக்கு கனடாவில் 10வருடம் சிறை!

குடிவெறியில் தாம் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் துப்பாக்கியால் சுட்டதாகக் கூறப்படும் — மார்க்கம் என்ற இடத்தைச் சேர்ந்த — ரமேஷ்குமார் இராஜகுலசிங்கம் (வயது 25) என்ற இலங்கைத் தமிழருக்கு கனடா ரொறன்டோ நீதிமன்றம் 10 வருடச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கனடா ஸ்காபறோவில் உள்ள ராப்ஸ்கொட் குடும்ப உணவு விடுதியில் கடந்த ஆண்டு ஏப்ரல் 24 ஆம் திகதி குடித்துக் கொண்டிருந்த போது, போதை ஏறிய நிலையில் நண்பர்களால் தூண்டப்பட்டு விடுதிக்கு வந்திருந்தோர் மீது காரணமின்றி இவர் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் விடுதிக்கு வந்திருந்த இருவர் மார்பிலும் மற்றும் மூவர் உடம்பின் அடிப்பாகங்களிலும் காயங்களுக்கு இலக்காகினர்.

சட்ட விரோதமாக துப்பாக்கி வைத்திருந்தது உட்பட்ட ஐந்து குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டிருந்தன. (உ)

அவசரகாலச் சட்டம் காலாவதி:

தமிழ் இளைஞர்கள் பலர் 15ஆம் திகதி விடுதலையாவர்?

கொழும்பு, ஜூலை 8

இம்மாதம் 15ஆம் திகதி முதல் அவசரகாலச் சட்டம் காலாவதியாவதைத் தொடர்ந்து அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்படுவர் என்றும்—

அவர்களில் பெரும்பாலானோர் கொழும்பில் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் என்றும் —

''சண்டே லீடர்'' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

எனினும் — கடும்போக்குத் தீவிரவாதிகள் தொடர்ந்தும் தீவிரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாரதூரமான குற்றங்களைப் புரிந்த சந்தேக நபர்களுக்கு எதிராக இம்மாதம் 14ஆம் திகதிக்கு முன் மேல் நீதிமன்றங்களில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படும் என்றும்—

ஒருதரம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டால் அவசரகாலச் சட்டம் காலாவதியானாலும் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டவுடன் அரசியல்கட்சிகள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-ா]

திருகோணமலை சு. க. அமைப்பாளர்

கொழும்பு, ஜூலை 8

ஸ்ரீ ல. சு. கட்சியின் திருகோணமலை அமைப்பாளராக கோணேஸ்வரர் கோயில் தர்மகர்த்தா சட்டத்தரணி மு. கோ. செல்வராஜா நியமிக்கப்பட்டிருப்பதாக திருகோணமலைச் செய்திகளை மேற்கோள் காட்டி, கொழும்பிலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கிறது.

(உ)

இலவச சீருடை விநியோகம்

தென்மராட்சி, ஜூலை 8

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை கடந்த புதன்கிழமை முதல் வழங்கப்பட்டுவருகின்றன.

ஆண்டு பிரிவுகளுக்கு ஏற்ப குறித்த அளவுகளில் சீருடைத் துணி விநியோகிக்கப்படுகிறது.

(ஐ-117)

ஈ. பி. ஆர். எல். எவ். தனித்துப் போட்டி

கொழும்பு, ஜூலை 8

ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பு வடக்கு- கிழக்கில் தனித்துப் போட்டியிடும் என்றும்—

தென் இலங்கையில் உள்ள தமிழர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கும்படி தமது அமைப்பு கோரும் என்றும்—

அந்த அமைப்பின் பேச்சாளர் எம். சேதிஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

(ஓ-எ-6)

சூழல் பாதுகாப்பு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். மாவட்ட சூழல் பாதுகாப்பு தொடர்பான கட்டுரை ஓவியப் போட்டிகள் நல்லூர் பிரதேச செயலகமண்டபத்தில் நாளை நடைபெறவுள்ளது. பங்குபற்ற விரும்புவோர் வேண்டிய ஆயத்தங்களுடன் காலை 8 - 30 மணிக்கு அங்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

கிளிநொச்சியில் இரண்டு புதிய பாடசாலைகள்

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு புதிய பாடசாலைகள் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தினால் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கண்டாவளை கல்விக் கோட்டத்தில் கல்மடு நகரிலும் கரைச்சி கல்விக் கோட்டத்தில் யூனியன் குளத்திலும் புதிய பாடசாலைகள் திறந்து வைக்கப்பட்டன. [ஓ-76]

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நேர அட்டவணை

இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள ஜி. சீ: ஈ. உயர்தரப் பரீட்சையின் நேர அட்டவணை வருமாறு:-

முதற் கட்டம்

திகதி	முற்பகல்	பாடம்		பிற்பகல்	பாடம்	
01-08-94	8-30 – 10-30	விலங்கியல்	I	12 30 - 15-30	சரித்திரம்	I
	8-30 – 11-30	பிரயோக கணிதம்	I			
		சரித்திரம்	II			
02-08-94	8-30 – 11-30	பிரயோக கணிதம்	II	12-30 - 15 30	மனைப் பொருளியல்	I
		விலங்கியல்	II		இலத்தீன்	I
		சித்திரம்	I			
03-08-94	8-30 – 11-30	தூய கணிதம்	I	12-30 – 15-30	மனைப் பொருளியல்	II
					இலத்தீன்	II
04-08-94	8-30 – 10-30	தாவரவியல்	I	12-30 - 15-30	தூய கணிதம்	II
	8-30 – 11-30	தமிழ்	I			
05-08-94	8-30 – 11-30	தாவரவியல்	II	13-30 – 16-30	சங்கீதம் - கர்நாடகம்	I
		தமிழ்	II		சங்கீதம்-மேலைத்தேய	I
06-08-94	8-30 – 10-30	இரசாயனவியல்	I	12 30 – 15-30	நாட்டியம்-பரதம்	I
	8-30 – 11-30	பொருளியல்	I			
08-08-94	8-30 - 11-30	இரசாயனவியல்	II	12-30 – 15-30	சங்கீதம்-கர்நாடகம்	II
		நாட்டியம்-பரதம்	II		சங்கீதம்-மேலைத்தேய	II
09-08-94	8 30 – 10-30	பௌதிகவியல்	I			
	8-30 – 11-30	கணக்கியல்	I			
10-08-94	8-30 11-30	பௌதிகவியல்	II	12-30 – 15 30	விவசாயவிஞ்ஞானவியல்	I
		கணக்கியல்	II			
11-08-94	8 30 – 11-30	பொருளியல்	II	12-30 - 15-30	விவசாயவிஞ்ஞானவியல்	II

இரண்டாவது கட்டம்

திகதி	முற்பகல்	பாடம்		பிற்பகல்	பாடம்	
22-08-94	8 30 – 11-30	சித்திரம்	II	13-30 – 16-30	இந்துசமயம்	I
		ஆங்கிலம்	I		கிறிஸ்தவம்	I
					சமஸ்கிருதம்	I
23 08 94				12-30 – 15-30	இந்துசமயம்	II
					கிறிஸ்தவம்	II
					சமஸ்கிருதம்	II
24-08-94	8-30 11 30	அரசியல் முறைத்துவங்கள்	I	12-30 – 15 30	வர்த்தகமும் நிதியும்	I
25 08-94	8-30 11-30	புவியியல்	I	12-30 – 15 30	வர்த்தகமும் நிதியும்	II
26-08 94	8-30 – 11-30	புவியியல்	II	12-30 - 15-30	இந்து நாகரிகம்	I
27-08-94	8-30 – 11 30	புவியியல்	III	12-30 15 30	இந்து நாகரிகம்	II
29-08-94	8-30 – 11-30	சித்திரம்	III	13-30 - 16 30	அளவையியலும் விஞ்ஞான முறையும்	I
		ஆங்கிலம்	II			
30-08-94	8-30 – 11 30	அரசியல் முறைத்துவங்கள்	II	12-30 – 15-30	நாடகமும் அரங்கியலும்	I
31-08-94	8-30 – 11-30	நாடகமும் அரங்கியலும்	II	12-30 – 15 30	அளவையியலும் விஞ்ஞான முறையும்	II
01-09-94	8-30 – 10-30	நாடகமும் அரங்கியலும்	III			

பிறந்த நாள் நினைவு
மீண்டும் நீ பிறவாயோ

அன்னைக்கு
08
—
07
—
1974

அக்கினிக்கு
03
—
02
—
1994

செல்வி

ஜெனிபர் செல்வமதி விஜயரட்ணம்

கண்ணே கண்மணியே
எமதருமைக்கடைக்குட்டியே செல்வி!
கண்ணை இமைகாப்பதுபோல்
உனைக்காத்து இருந்தோம்.
காலம் வரும் போதினிலே
உன்னவன் கரம்பற்றி
காலமெல்லாம் களித்திருப்பாயென
கற்பனைதான் கண்டிருந்தோம்.
காலம்தான் கனியுமுன்னே
காலனவன் கவர்ந்து சென்ற
காரணம்தான் நாமறியோம்
கற்பனையில் கதைகள் பல
கதைப்பவர்களை நாமறிந்தோம்.
காரணங்கள் நாம் கூற
கனவில் நீ தோன்றியேனும்
கவலை எனப்பெருகும் எம்
கண்ணீரைத் துடைக்காயோ?

உன் பிறப்பின் நாளில்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

16/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8721)

மரண அறிவித்தல்கள்

ஆறுமுகம் இராசநாயகம்

(Ret. O. A. Department of Education Jaffna)

காரைநகர் பயிற்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் இராசநாயகம் காரைநகரில் காலமானார்.

இவர் லீலாவதியின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரி, தர்ஷியா, லலிதாராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானேஸ்வரனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆறுமுகம், தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகேந்திரம், செல்லம்மா, தில்லையம்பலம் மற்றும் நல்லம்மா, வதனமுத்து, கனகம்மா ஆகியோரின் சகோதரரும், இராசையா, செல்லத்துரை, குழந்தைவேலு, பத்மநாதபிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகம்மா பத்மநாதபிள்ளை
(சகோதரி)

பக்கஸ் லேன்,
(Bacus Lane)
மானிப்பாய்.

(31808)

சண்முகநாதன் மோகனநாதன்

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற சண்முகநாதன் அமராவதியின் அன்பு மகன் மோகனநாதன் ஜேர்மனியில் அகாலமரணமானார்.

அன்னாரின் பூதவுடல் 01-07-94இல் ஜெர்மனியில் அடக்கம் செய்யப்பட்டது இவர் ஜெகநாதன் (சுவிஸ்), அல்லிராணி (சுவிஸ்), அருட்செல்வி, லோகேஸ்வரி, மகேஸ்வரி தேவிநாதன், சிறிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேந்திரன், செல்வி ஆகியோரின் மைத்துனரும், திரு.சிவகடாட்சம் - தயாநிதி (யாழ்ப்பாணம்), திரு தலையசிங்கம் - இராஜேஸ்வரி (நோர்வே), திரு மரியபரணம் - றஜினா [கொழும்பு]. திரு வன்னியசிங்கம்-ஜோசினி (ஜேர்மனி) ஆகியோரின் மருமகனும், திருமதி சற்குணம் இராசநாயகம், திருமதி செல்லம்மா சின்னத்தம்பி, திருமதி கண்ணம்மா உலகநாதன் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றார்கள்.

தகவல்
க. உலகநாதன்
(சிறிய தகப்பன்)

699/5, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[31812]

வீரவாகு கஜேந்திரன்

சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும் தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமாகிய வீரவாகு கஜேந்திரன் ஜேர்மனியில் காலமானார்.

இவர் சண்டிலிப்பாய் வீரவாகு - சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மகனும், பத்மலோசனியின் அன்புக் கணவரும், துஷ்யந்தன், தாரகா, தக்ஷியா ஆகியோரின் தகப்பனாரும், ஜெயந்திராதேவி, லோகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், இராஜகோபாலன் (இளைப்பாறிய தொழில் நுட்பவியலாளர்), சுமவதி ஆகியோரது மைத்துனரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜெ. இராஜகோபாலன்

(31802)

மேற்கத்திய நாடுகளும், அமெரிக்காவும்

இலங்கைக்கான உதவிகளை நிறுத்தினால் இரு தரப்பும் பேச்சுக்கு வரமுடியும்

இங்குவந்துள்ள அமெரிக்கப்பிரமுகர் ஆலோசனை

யாழ்ப்பாணம் ஜூலை 8

''மேற்கத்திய நாடுகளும், அமெரிக்காவும் இலங்கைக்கான சகல உதவிகளையும் நிறுத்த தொடங்கினால் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு வரமுடியும் என நான் நினைக்கிறேன்.''

மேற்கண்ட ஆலோசனையை அமெரிக்க நாட்டைச் சேர்ந்த செல்வி. எலிசபெத் ஒக்கேவ் வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் நேற்று மாலை நற்சமூக நடுநிலையத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அமெரிக்கா யேசுகள் சபையின் பிரதிநிதியும், யேசுகள் சபை சஞ்சிகையின் ஆசிரியருமான இவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''உங்கள் போராட்டம் பற்றி படிக்கும் மாணவனாக இங்கு வந்துள்ளேன். உங்கள் விடயங்களை அறிவதில் ஆவல் கொண்டுள்ளேன்.

வட - கிழக்கு மாகாணத்தின் போராட்டத்தின் தன்மையையும் மக்கள் படும் துன்பங்களையும் நேரில் பார்த்தேன். திருமலை சென்றிருந்த சமயம் அங்கு இடம்பெயர்ந்த மக்களையும், இந்தியாவில் இருந்து திரும்பிய அகதிகளையும் பார்த்து, அவர்களுடன் கலந்துரையாடினேன்.

அவர்கள் இருட்டறைகளில், இருள் சூழ்ந்த வாழ்க்கையை துன்ப நிலையில் நடத்துவதை காணக் கூடியதாக இருந்தது.

இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் வாழ்வதற்கு அவர்கள் அச்சம் அடைவதை உணரமுடிந்தது.

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு காது செவிடான நிலையில் உள்ள ஒருவரை சந்தித்தேன். அச்சம்பவம் நடந்து ஒன்றரை மாதங்களுக்கு பின் அவரை படையினர் தமக்கு வேலை செய்ய நிர்ப்பந்திப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மக்கள் சுயநிர்ணயம் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளதையும், வெளிநாடு வந்து தமக்கு உதவும் என்று நம்பவில்லை என்பதையும் உணர முடிகிறது.

உலகில் பெரும் வல்லரசாக விளங்கும் அமெரிக்கா இந்த விடயம்குறித்து என்ன நிலைப்பாடு கொண்டுள்ளது என்பது குறித்தும்,—

மக்கள் என்ன கருத்துடன் உள்ளார்கள் என்பது குறித்தும் சரியாக கூறமுடியாதுள்ளது.

உலகில் நடக்கும் போராட்டங்களில் இங்கு இடம்பெற்று வரும் போராட்டம் அங்கு சிறிதளவே மக்களுக்கு தெரியப்படுத்தப்படுகிறது. இதனால் மக்கள் இப்போராட்டத்தைச் சரியாக கணிக்கவில்லை.

இலங்கை போராட்டத்துக்கு அமெரிக்காவின் ஆதரவு இருக்குமா என்பது ஐயம்.

உங்கள் துன்பங்களையும், போராட்டத்தின் உன்னதத்தையும் அமெரிக்கா திரும்பியதும் எனது சஞ்சிகை மூலம் மக்களுக்கு தெரியப்படுத்துவேன்.

இலங்கைக்கான உதவிகளை மேற்கு நாடுகளும், அமெரிக்காவும் நிறுத்த ஆரம்பித்தால் இருதரப்பும் பேச்சுக்கு முன் வர முடியும் என நினைக்கிறேன்.

இன்றைய உலகம் உங்கள் கண்ணீர்க்கதையைக் கேட்கா விட்டாலும் வரலாறு ஒருநாள் கேட்கும்— என்றார்.

நற்சமூக நடுநிலைய இயக்குநர் வண.பிதா. எஸ். ஜெ. இம்மானுவேல் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

(ஒ-3)

ஷெல் வெடித்து சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

நிலத்தில் புதையுண்டிருந்த பழைய ஷெல் ஒன்றை அமுக்கிப் பார்த்தபோது அது வெடித்தது. இதனை அமுக்கிய சிறுவன் படுகாயமடைந்தார்.

ஆனைக்கோட்டை முள்ளிப் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த செல்லத்துரை சுமன் (வயது 13) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (இ-15)

பொதுமக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாசனத்தின் கொள்கை விளக்கப்பேச்சு ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ்தான் தயாரிக்கப்படும்.

எதிர்வரும் ஓகஸ்ட் 16 ஆம் திகதி தேர்தல் முடிந்து எம்.பிக்கள் தெரிவானவுடன், தற்போதைய அமைச்சரவை காலாவதியாகிவிடும். அதன் பின்னர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றியீட்டினால், நாடாளுமன்றத்தில் உள்ள மிகப்பெரிய கட்சி என்ற முறையில் நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரை பிரதமராக ஜனாதிபதி நியமிக்க வேண்டும். இதன்பின்னர் இடம்பெறும் அரசியல் நிகழ்வுகள் விநோதமான திருப்பங்களை நிச்சயமாக ஏற்படுத்தும்

பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற கட்சி ஒன்றின் தலைவர் என்பதற்கு மத்தியில் ஜனாதிபதி விஜேதுங்க தமது கட்சியை தோற்கடித்த கட்சியில் இருந்து அமைச்சர்களை நியமிக்க வேண்டும் என அரசமைப்பு கூறுகிறது.

தனது கொள்கைகள், திட்டங்கள் இவற்றை எல்லாம் முற்றாக மாற்றுவதற்கு மக்களிடமிருந்து ஆணை பெற்ற இன்னொரு கட்சியின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் அமைச்சரவைக்கு தலைமை வகிக்க வேண்டிய நிலை ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு அரசமைப்புரீதியாக ஏற்படுகிறது.

புதிய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கும் தமது கட்சிக்குத் தலைவராகவும் பணியாற்ற வேண்டியவராக ஜனாதிபதி இருப்பார்.

இறுதியாக புதிய நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆங்குரார்ப்பணஞ் செய்து வைக்கும்போது ஜனாதிபதி நிகழ்த்தும் கொள்கை அறிக்கை, அவரது சொந்தமானதாகவோ அல்லது புதிய அமைச்சரவை தயாரித்ததாகவோ இருக்கப்போவது இல்லை. இது பேரழிவிற்கான கலவையாக இருக்கும் என்பது நிச்சயமானது

இந்த நெருக்கடியில் இருந்து மீள மாற்று வழியும் உண்டு

அரசமைப்பின் 37 ஆவது ஷரத்துக்கு இணங்க, ஜனாதிபதி — சுகயீனம், நாட்டில் இல்லாத நிலை மற்றும் தமது கடமைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்படுவதாகக் கருதுமிடத்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு தமது கடமைகளைச் செய்வதற்கு பிரதமரை பதில் ஜனாதிபதியாக நியமிக்கலாம்.

இந்த 37 ஆவது ஷரத்து இப்படியான நெருக்கடியான நிலையில் மீளும் நோக்கத்துடன் கொண்டு வரப்படவில்லையாயினும் —

ஒரு நிலையான அரசாங்கத்தை அமைக்கவும் சமாதானமான முறையில் அதிகாரத்தை கைமாற்றிக் கொடுக்கவும் இந்த ஷரத்தைப் பயன்படுத்தலாம்.

37 ஆவது ஷரத்தை பிரயோகித்து, புதிய பிரதமரை பதில் ஜனாதிபதியாக ஜனாதிபதி விஜேதுங்க நியமிப்பாராயின் —

பதில் ஜனாதிபதி தமது கட்சியின் அரசாங்கம் ஒன்றை நியமிக்கவும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆங்குரார்ப்பணம் செய்யும் போது மக்களின் ஆணையைப் பிரதிபலிக்கும் கொள்கை அறிக்கையை வெளியிடவும் முடியும்.

இப்படி திரு. நிஹால் ஜெயவிக்கிரம தெரிவித்திருக்கிறார்.

(இ-எ)

இரண்டரைச்சத..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திடீர்த் தேவைகளின் போது அடகுக் கடன் வாய்ப்பின்றித் துன்பப்படுவோருக்குத் துணையாக இத்திட்டம் செயற்படத் தொடங்கி உள்ளதும் தமிழீழ மக்களைப் பொறுத்தவரை பேருதவி நல்குவதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழீழ மக்களின் பொருண்மிய வாழ்வைப் புதுக்கிச் சீராக்கும் வைப்பகத்தின் பல்வேறு திட்டங்களில் இனிய தொடக்கமாகவே இந்த அடகுக் கடன் திட்டம் அறிமுகமாகியுள்ளது. இதனால் பெருமளவு மக்கள் பயன் நுகர்வரென நம்பப்படுகிறது.

முன்னைய காலங்களில், அடகு வைத்தலினால் ஏமாற்றத்துக்குள்ளாகி இழப்புகளை அடைந்த மக்கள், தங்கள் தங்க உடைமைகளைத் தங்கள் ஏது வைப்பகத்திலேயே அடகு வைத்துப் பயன் பெறுவதனால், ஏமாற்றம் இழப்பு என்பன எதிர்காலத்தில் நிகழாதென்பதும், தொழில்வளம் பெருக்கிப் பொருண்மியத் தேவைகள் நிறைவேறுமென்பதும் இந்தத் திட்டத்தின் குறிப்பிடக்கூடிய அம்சங்களாகும்.

(அ)

சோமவன்ஸவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயல்களையும் எதிர் நோக்கும் சக்தி பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு இருப்பதாகவும் அவர் கூறினார்

எதிர்வரும் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தெளிவான வெற்றியைப்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொண்ட காமினி பொன்சேகாவும் கலந்து கொண்டார்.

(இ-எ-6)

அவசரகால...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார் என்றும் சொல்லப்படுகிறது.

நாடாளுமன்றம் கலைக்கப் பட்டுவிட்டால் அவசரகாலச் சட்டம் காலாவதியாகும். ஆனால் அதனை நீடிப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தில் வசதியுண்டு.

அவசரகாலச் சட்டத்தை, தாம் முதலில் பிரகடனம் செய்து அதனை நாடாளுமன்றம் அங்கீகரிப்பதற்காக சபையை அதற்கென விசேடமாகக் கூட்டுவதற்கு, அரசமைப்புச் சட்டத்தில் உள்ள வசதியை ஜனாதிபதி பயன்படுத்த மாட்டார் என்றும் —

அதன்மூலம் அச்சட்ட விதிகளை காலாவதியாக விடுவதற்கு ஆலோசிக்கப் படுவதாகவும் — முன்னர் செய்திகள் வந்தன

ஆனால் அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்குப் பாதகமாக கருத்துத் தெரிவிக்கப் பட்டதாக இப்போது அறிய வந்துள்ளது.

(அ-4)

யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றது. அம்பாறை மாவட்டத்தைத் தவிர்ந்த இணைக்கப்பட்ட வடக்கு — கிழக்கு அமைப்பு பற்றி ஆலோசிக்க [illegible]ளோம்.

இப்படி அவர் கூறினார்.

(உ-எ)

ஜே.வி.பி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் ஆயுதப் படையினரால் கொல்லப்பட்டனர்.

சோமவன்ஸ அமரசிங்க உயிர் தப்பி இந்தியாவுக்குச் சென்று தலைமறைவானார். பின்னர் அங்கிருந்து பிரிட்டன் சென்று அங்கிருந்து பாரிஸ் சென்று தங்கினார். சோமவன்ஸ அப்போதைய ஜே.வி.பியின் உயர் மட்டத் தலைவர்கள் ஒன்பது பேர்களில் ஒருவர் என்று கூறப்படுகிறது.

ஜே.வி.பியின் இப்போதைய தலைவர் தாமே என்று உரிமை கோரி அவர் இயக்கத்தை வளர்த்து வருகிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வருமாறு ஜனாதிபதி விஜேதுங்கா அண்மையில் ஜே.வி.பிக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் பொதுத் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்துடன் சோமவன்ஸ நாடு திரும்புகிறார்.

சிறு குழுக்களுடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதாக, சோமவன்ஸ தெரிவித்தார் என்று தூரகிழக்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கூறியது.

அவர் கொழும்பு திரும்பினால் கைது செய்யப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்ததாகவும் அதேபடி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்தது.

அரசாங்கமே சோமவன்ஸாவை கொழும்புக்கு அழைத்து வந்திருப்பதாக சந்திரிகா குமாரணதுங்கா குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை —

தேசிய மீட்பு முன்னணி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றை அங்கீகரிக்க கோரும் விண்ணப்பம் ஒன்று தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி, ஸ்ரீலங்கா பிரதேசிய பெரமுன மற்றும் சிறு குழுக்களின் முன்னணியாக இப்புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

அங்கீகாரம் கோரும் விண்ணப்பத்தை புதிய கட்சியின் பொதுச் செயலாளர் ஆரியபுலேகொட கடந்த வாரம் தேர்தல் ஆணையாளரிடம் கையளித்தார்.

இவ் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா, நிராகரிக்கப்பட்டதா என்ற விபரத்தை வெளியிட தேர்தல் ஆணையாளர் மறுத்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸாவை தலைவராகக் கொண்ட இப்புதிய கட்சி எல்லா மாவட்டங்களிலும் போட்டியிடும் என்று தெரிகிறது.

(அ-உ-எ-6)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெறும். பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

மாலை 5.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக 'பி' அணி எதிர் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி.

6.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக பெண்கள் அணி எதிர் குருநகர் விளையாட்டு கழக பெண்கள் அணி.

7.30 மணிக்கு: யாழ். பல்கலைக்கழக 'ஏ' அணி எதிர் பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் அணி.

(ஒ)

★ ★ ★

யாழ். வட்ட லியோ கழகம் நடத்தும் சதுரங்கப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

(இ-3-20)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் யாழ். றோட்டறிக்கழக ஆதரவில் நடத்தப்பட்ட மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த நிகழ்வில் யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் திரு. ஈ. சரவணபவன் சிறப்பு விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவத் துறைத் தலைவர் திரு. மா. நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(இ-3-20)

★ ★ ★

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் டொனால்ட் கணேசகுமார் கிண்ணத்துக்காக நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக அணியும், பற்றீஷியன்ஸ் அணியும் மோதும்.

(இ-8)

நாளை

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஓய்வூதியர் சங்கம் ஒன்றை அமைப்பதற்கான பொதுக்கூட்டம் நாளை சனி முற்பகல் 9.30 மணிக்கு யாழ். புனித மரியாள் (ஓ.எம்.ஆர்) மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனத்தால் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ)

3 ஆவது பிறந்தநாள்

வாழ்த்து

செல்வி வேணுகா செல்வராஜா

நியூ லங்கா பாம் இணுவிலைச் சேர்ந்த செல்வராஜா, அறிவழகி தம்பதிகளின் செல்வப் புதல்வி வேணுகா தனது மூன்றாவது பிறந்த நாளை இன்று (08-07-1994) வெள்ளிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா கோகுலன், அப்பப்பா, அம்மம்மா, பெரிய மாமா அறிவமுதன் (பிரான்ஸ்), அத்தை சுகந்தினி (பிரான்ஸ்), மச்சான் பியர் (பிரான்ஸ்), சின்னமாமா அன்பழகன் (டோகா), சித்தி இன்பமுகி (டென்மார்க்), சித்தப்பா பரமேஸ்வரன் (டென்மார்க்), சித்தி பேரழகி, சித்தப்பா கிருஷ்ணபாலன் (பிரான்ஸ்) மற்றும் ஊரெழு மேற்கில் இருக்கும் பெரியப்பா குடும்பம், மாமா, அத்தை சின்னமாமா அத்தை பவானந்தம், சித்தப்பா, மகேஸ் சித்தி, திருச்செல்வம் சித்தப்பா, மேனகா சித்தி, ரவி அண்ணா (ஜேர்மனி), டோச்சன் மச்சான் (ஹொலண்ட்), சுதன் மச்சான் (ஜேர்மனி), மச்சாள்மார், மச்சான்மார், இரத்தினம் சித்தப்பா குடும்பம், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பொன்னாலை, வரதராஜப் பெருமாள் அருள் பெற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

நியூ லங்கா பாம்

கே.கே. எஸ். வீதி,
இணுவில்.

[31811]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 398/8 இலுள்ள அச்சகத்தில் 08-07-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது